"கண்ணைக் காப்பது இமை"
"மண்ணைக் காப்பது மழை"

# மதுரை மாநகராட்சி

# <u>மாமன்றக் கூட்டம்</u>

**2014-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 25-ம் நாள் வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு**

## அறிஞர் அண்ணா மாளிகை
## பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
## மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்
## <u>மாமன்ற அவசரக் கூட்ட நிகழ்ச்சி நிரல்</u>

---

**அ) திருக்குறள் :** **“ பொய்யாமை பொய்யாமை ஆற்றின் எய்யாமை
செய்யாமை செய்யாமை நன்று”**

**பொருள் :** **பொய்யாமையாகிய அறத்தை உண்மையாகவே ஒருவன் கடைப்பிடித்தால் அவன் வேறு அறங்களைச் செய்ய வேண்டும் என்ற அவசியம் இல்லை.**

**ஆ) தீண்டாமை ஒழிக்க மேற்கொள்ளும்**

## <u>உறுதிமொழி</u>

இந்திய அரசியலமைப்பின்பால் இடைவிடாத உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய நான், நமது அரசியலமைப்பின்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர் மீதும் தெரிந்தோ, தெரியாமலோ, சமூக வேற்றுமையை மனம், வாக்கு, செயல் என்று எந்த வகையிலும் கடைப்பிடிக்கமாட்டேன் என்று, இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும். உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.

(அரசாணை (நிலை) எண்.245 செய்தி மற்றும் சுற்றுலாத்துறை நாள் 13.11.98)

**1) <u>CW2/029947/14</u>**

அரசாணை நிலை எண் **124** நகராட்சி நிர்வாகம் கு.வ.து நாள் **07.09.2011** உள்ளாட்சி தேர்தல் அறிவிக்கப்பட்டு **17.10.2011** ம் தேதி அன்று தேர்தல் நடைபெற்றும் **28.10.2011** அன்று தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டது. மேற்கண்ட அரசாணையின் படி வார்டு **4** மாமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட திரு.கோபாலகிருஷ்ணன் **03.03.2014** அன்று ராஜினாமா செய்த காரணத்தினால் ஏற்பட்ட காலியிடத்திற்கும், வார்டு **85** மாமன்ற உறுப்பினர் திரு.குமார் **20.09.2012** ல் காலமாகிவிட்ட காரணத்தினால் ஏற்பட்ட காலியிடத்திற்கும் தமிழ்நாடு தேர்தல் ஆணையம் சென்னை, அறிவிப்பு கடித எண் S.O.NO.110/2014 TNSEC/ME1 தேதி 27.08.2014 ல் குறிப்பிட்டுள்ள சட்டபூர்வ ஆணையின் படி வார்டு **4** மற்றும் **85**க்கு இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டது. இடைத்தேர்தலுக்கான அறிவிப்பின் படி வார்டு **4** க்கு 18.09.2014 நடைபெற்ற இடைத்தேர்தலில் அ.இ.அ.தி.மு.க கட்சியின் சார்பாக போட்டியிட்ட திரு.கே.சண்முகம் அவர்கள் மாமன்ற உறுப்பினராக 22.09.2014 அன்று தேர்தல் முடிவின் அடிப்படையில் தேர்தெடுக்கப்பட்டார்.

வார்டு 85 ன் இடைத்தேர்தலில் அ.இ.அ.தி.மு.க கட்சியின் சார்பாக போட்டியிட்ட திருமதி K.லதா என்பவர் போட்டியின்றி மாமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

மேற்கண்ட விபரத்தினை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.687</u>**

**<u>பதிவு செய்யப்பட்டது.</u>**

**2) CW2/021468/2014**

அகில இந்திய மேயர்கள் கவுன்சில் என்ற அமைப்பின் தலைவர் அவர்களின் (கடிதம் எண்.6418 நாள்:22.05.2014) கடிதத்தில் புது டெல்லியில் அமைந்துள்ள அகில இந்திய மேயர்களின் கவுன்சிலில் அனைத்து மாநில மாநகராட்சி மேயர்கள் உறுப்பினர்களாக சேர்ந்து வருடந்தோறும் சந்தா தொகை செலுத்தப்பட்டு வருவதாகவும், அதுபோல் மதுரை மாநகராட்சி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களும் அகில இந்திய மேயர்களின் கவுன்சிலில் உறுப்பினராக இருப்பதால் 2014-2015-ம் ஆண்டிற்குரிய சந்தா தொகை ரூ.20,000/-ம் (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) செலுத்தும்படி கோரப்பட்டுள்ளது.

அகில இந்திய மேயர்களின் கவுன்சிலால் வரையறுக்கப்பட்டுள்ள 2014-2015–ம் ஆண்டிற்குரிய சந்தா தொகை ரூ.20,000/–த்தை (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) அகில இந்திய மேயர்களின் கவுன்சிலிற்கு, செலுத்துவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**குறிப்பு :** அகில இந்திய மேயர்களின் கவுன்சில் பதிவு செய்யப்பட்ட அமைப்பாகும்.

**மாமன்றத்தீர்மானம் எண்.688**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**3) H6/6561/03**

மதுரை மாநகராட்சி பொது சுகாதாரப்பிரிவின் கீழ் நான்கு மண்டலங்களிலும் செயல்பட்டு வரும் மண் கூட்டும் பணிபுரிய ஒப்பந்த அடிப்படையில் 100 துப்புரவு ஊழியர்களை குவாலிட்டி சர்வீஸ் சொசைட்டி மூலம் மாவட்ட ஆட்சித் தலைவர் நிர்ணயித்த தினக்கூலி அடிப்படையில் 01.01.2014 முதல் 30.06.2014 முடிய சப்ளை செய்த வகையில் அதற்கான செலவினத்தை பொது நிதியிலிருந்து ரூ.40,54,400/-ஐ ( நாற்பது லட்சத்து ஐம்பத்தி நாலாயிரத்து நானூறு மட்டும்) செலவு செய்ததற்கு மாமன்றத்தின் பின்னேற்பினையும் 01.07.2014 முதல் மாவட்ட ஆட்சித் தலைவர் நிர்ணயித்த தினக்கூலி ரூ.205/- (ரூபாய் இருநூற்றி ஐந்து மட்டும்) +வழங்கவும், 01.07.2014 முதல் 31.12.2014 முடிய ஆறு மாத காலத்திற்கு மேற்படி குவாலிட்டி சர்வீஸ் சொசைட்டி மூலம் துப்புரவு ஊழியர்களை காலநீட்டிப்பு செய்யவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.689**
**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**4) H6/6561(A)/03**

மதுரை மாநகராட்சி பொது சுகாதாரப்பிரிவின் கீழ் செயல்பட்டு வரும் மகப்பேறுமனைகளில் பணிபுரிய ஒப்பந்த அடிப்படையில் 43 துப்புரவு ஊழியர்களை குவாலிட்டி சர்வீஸ் சொசைட்டி மூலம் மாவட்ட ஆட்சித் தலைவர் நிர்ணயித்த தினக்கூலி அடிப்படையில் 01.01.2014 முதல் 30.09.2014 முடிய சப்ளை செய்த வகையில் அதற்கான செலவினத்தை பொது நிதியிலிருந்து ரூ.26,57,744/- (ரூபாய் இருபத்தாறு லட்சத்து ஐம்பத்து ஏழாயிரத்தி எழுநூற்றி நாற்பத்து நான்கு மட்டும்) செலவு செய்ததற்கு மாமன்றத்தின் பின்னேற்பினையும் 01.07.2014 முதல் மாவட்ட ஆட்சித் தலைவர் நிர்ணயித்த தினக்கூலி ரூ.205/- (ரூபாய் இருநூற்றி ஐந்து மட்டும்) வழங்கவும், 01.10.2014 முதல் 31.03.2015 முடிய ஆறு மாத காலத்திற்கு மேற்படி குவாலிட்டி சர்வீஸ் சொசைட்டி மூலம் துப்புரவு ஊழியர்களை காலநீட்டிப்பு செய்யவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.690**
**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**5) H6/6561(B)/03**

மதுரை மாநகராட்சி பொது சுகாதாரப்பிரிவின் கீழ் செயல்பட்டு வரும் மகப்பேறுமனை மற்றும் மருந்தகங்களில் பணிபுரிய ஒப்பந்த அடிப்படையில் 20 காவலர்களை குவாலிட்டி சர்வீஸ் சொசைட்டி மூலம் மாவட்ட ஆட்சித் தலைவர் நிர்ணயித்த தினக்கூலி அடிப்படையில் 01.01.2014 முதல் 30.09.2014 முடிய சப்ளை செய்த வகையில் அதற்கான செலவினத்தை பொது நிதியிலிருந்து ரூ.13,99,980/- ஐ ( ரூபாய் பதிமூன்று லட்சத்து தொண்ணூற்று ஒன்பதாயிரத்து தொள்ளாயிரத்தி எண்பது மட்டும்) செலவு செய்ததற்கு மாமன்றத்தின் பின்னேற்பினையும் 01.07.2014 முதல் மாவட்ட ஆட்சித் தலைவர் நிர்ணயித்த தினக்கூலி ரூ.232/- (இருநூற்று முப்பத்தி இரண்டு மட்டும்) வழங்கவும் 01.10.2014 முதல் 31.03.2015 முடிய ஆறு மாத காலத்திற்கு

மேற்படி குவாலிட்டி சர்வீஸ் சொசைட்டி மூலம் காவலர்களை காலநீட்டிப்பு செய்யவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.691**
**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

6) **H6/22873/13**

மதுரை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அரசு ஆணையின்படி திறக்கப்பட்ட கீழ்க்கண்ட 11 அம்மா உணவகங்களில் அவசர அவசியம் கருதி காலை, மாலை இரு வேளைகளிலும் துப்புரவு பணி மற்றும் காவலர் பணி செய்திட ஒரு உணவகத்திற்கு துப்புரவு பணியாளர் ஒருவர் மற்றும் காவலர் ஒருவர் என்ற அடிப்படையில் ஒப்பந்த அடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நிர்ணயித்த காவலர் பணிக்கு ரூ.232/- (EPF - 12%, ESI - 4.75%) துப்புரவு ஊழியர் பணிக்கு ரூ.205/- (EPF - 12%, ESI - 4.75%) என்ற தினக்கூலி விகிதத்தில் குவாலிட்டி சர்வீஸ் சொஸைட்டி மூலம் 01.10.2014 முதல் 31.03.2015 முடிய சப்ளை செய்யவும், அதற்கான செலவினத்தை மாநகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

| வ. எண் | உணவகங்களின் விபரம் | பணியாளர் களின் விபரம் | எண்ணிக்கை | பணியாளர் களின் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1 | ஆனையூர், வார்டு எண். 2 | துப்புரவு பணியாளர்கள் | 1 | காவலர்கள் | 1 |
| 2 | தேன்மொழி கல்யாண மண்டபம், வார்டு எண். 10 | துப்புரவு பணியாளர்கள் | 1 | காவலர்கள் | 1 |
| 3 | புதூர் மருத்துவமனை கட்டிட வளாகம், வார்டு எண். 45 | துப்புரவு பணியாளர்கள் | 1 | காவலர்கள் | 1 |
| 4 | காந்திபுரம், வார்டு எண். 46 | துப்புரவு பணியாளர்கள் | 1 | காவலர்கள் | 1 |
| 5 | ராமராயர் மண்டபம், வார்டு எண். 35 | துப்புரவு பணியாளர்கள் | 1 | காவலர்கள் | 1 |
| 6 | புதுராம்நாட் ரோடு, வார்டு எண். 54 | துப்புரவு பணியாளர்கள் | 1 | காவலர்கள் | 1 |
| 7 | C.M.R. ரோடு, வார்டு எண். 71 | துப்புரவு பணியாளர்கள் | 1 | காவலர்கள் | 1 |
| 8 | மேலவாசல், வார்டு எண். 78 | துப்புரவு பணியாளர்கள் | 1 | காவலர்கள் | 1 |
| 9 | திருப்பரங்குன்றம், வார்டு எண். 96 | துப்புரவு பணியாளர்கள் | 1 | காவலர்கள் | 1 |
| 10 | பழங்காநத்தம், வார்டு எண். 76 | துப்புரவு பணியாளர்கள் | 1 | காவலர்கள் | 1 |
| 11. | அரசு இராஜாஜி மருத்துவமனை, வார்டு எண். 36 | துப்புரவு பணியாளர்கள் | 2 | காவலர்கள் | 1 |
| | | **மொத்தம்** | **12** | **மொத்தம்** | **11** |

**மாமன்றத்தீர்மானம் எண்.692**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

7) **H1/H6/22210/12**

மதுரை மாநகராட்சி பொது சுகாதாரப்பிரிவின் கீழ் செயல்பட்டு வரும் மனநல மருத்துவமனையில் துப்புரவு பணியை மேற்கொள்ள 2 பணியாளர்களையும், காவல் பணியை மேற்கொள்ள 2 காவலர்களையும் ஒப்பந்த அடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நிர்ணயித்த காவலர் பணிக்கு ரூ.232/- (EPF - 12%, ESI - 4.75%) துப்புரவு ஊழியர் பணிக்கு ரூ.205/- (EPF - 12%, ESI - 4.75%) என்ற தினக்கூலி விகிதத்தில் குவாலிட்டி சர்வீஸ் சொஸைட்டி மூலம் 01.10.2014 முதல் 31.03.2015 முடிய சப்ளை செய்யவும், அதற்கான செலவினத்தை மாநகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.693**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**8) H6/20420/13**

மதுரை மாநகராட்சி பொது சுகாதாரப்பிரிவின் பிறப்பு / இறப்பு பதிவு, தாய் சேய் நலத் திட்டம், திருமண நிதியுதவி மற்றும் இதரப் பணிகள் கணினியில் பதிவு செய்யும் பணியை மேற்கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நிர்ணயித்த தினக்கூலி ரூ.398/- வீதத்தில் 12 கணினி பதிவாளர்களை 12.07.2013 முதல் 09.10.2013 முடிய Integrated Service Centre நிறுவனத்தின் மூலம் சப்ளை செய்ததற்கு அதற்கான செலவினம் ரூ.4,29,840/-ஐயும் 10.10.2013 முதல் 30.06.2014 முடிய 6 கணினி பதிவாளர்களை மட்டும் சப்ளை செய்ததற்கும் அதற்கான செலவினம் ரூ.6,30,432/-ஐயும் மாநகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கியதற்கு மாமன்றத்தின் பின்னேற்பினையும், 01.07.2014 முதல் 31.12.2014 முடிய சப்ளை செய்யவும் அதற்கான செலவினத்தை மாநகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.694**

**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**9) ம.பொ.4 / Est. 95 /14-15**

மதுரை மாநகராட்சி மண்டலம் 3 மண்டேலா நகரில் புதிதாக தரைமட்ட தொட்டி கட்டி லாரிமூலம் குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்கு ரூ.65,00,000/-க்கு ( ரூபாய் அறுபத்தைந்து லட்சம் மட்டும்) மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, ஆணையாளரின் நிர்வாக ஒப்புதல் பெற்றும், வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்றும், டெண்டர் வரவழைக்கப்பட்டதில், மின்னனு ஒப்பந்தபுள்ளி மூலம் ('E' Tender) இரண்டு டெண்டர்கள் வரப்பெற்று அதில் திரு C. சங்கர், மதுரை என்ற ஒப்பந்ததாரர் மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு சமமாக கொடுத்துள்ள டெண்டரை ஏற்று வேலை உத்தரவு வழங்க மாமன்றத்தின் ஒப்புதலையும், மேற்கண்ட மதிப்பீட்டிற்கு ஏற்கனவே முன்ஒப்புதல் பெறப்பட்ட நிர்வாக ஒப்புதலுக்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலையும் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.695**

**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**10) ம.பொ.4 / Est. 96 /14-15**

மதுரை மாநகராட்சி மண்டலம் 3 சின்னஉடைப்பு சுற்றுச்சாலை (14 கி.மீ) பகுதியில் புதிதாக தரைமட்ட தொட்டி கட்டி லாரிமூலம் குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்கு ரூ.56,50,000/-க்கு (ரூபாய் ஐம்பத்தி ஆறு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, ஆணையாளரின் நிர்வாக ஒப்புதல் பெற்றும், வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்றும், டெண்டர் வரவழைக்கப்பட்டதில், மின்னனு ஒப்பந்தபுள்ளி மூலம் ('E' Tender) இரண்டு டெண்டர்கள் வரப்பெற்று அதில் திரு C. சங்கர், மதுரை என்ற ஒப்பந்ததாரர் மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு சமமாக கொடுத்துள்ள டெண்டரை ஏற்று வேலை உத்தரவு வழங்க மாமன்றத்தின் ஒப்புதலையும், மேற்கண்ட மதிப்பீட்டிற்கு ஏற்கனவே முன்ஒப்புதல் பெறப்பட்ட நிர்வாக ஒப்புதலுக்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலையும் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.696**

**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**11) ம.பொ.2/26937/14**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சட்டப்பேரவை விதி எண்.110ன் கீழ் தமிழ்நாட்டின் 15 புரதான நகரங்களில் நகர மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் அபிவிருத்திப் பணிகள் தலா ரூ.100.00 இலட்சம் (ரூபாய் நூறு லட்சம் மட்டும்) மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டது. அதன்பேரில் இயக்குநர், நகர் மற்றும் ஊரக மேம்பாட்டுத் துறை அவர்களின் நேர்முக கடிதத்தில் (கடிதம் எண்.2825/2007/யுபி1, நாள் : 04.08.2014) மதுரை மாநகரில் புரதான நகர மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பணிகள் மேற்கொள்ள திட்ட அறிக்கை தயார் செய்து அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டது. எனவே மதுரை மாநகராட்சி மண்டலம் 4 வார்டு எண்.96ல் உள்ள திருப்பரங்குன்றம் திருக்கோவிலுக்கு சொந்தமான சரவணப் பொய்கை பகுதியில் புரதான நகர மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் குடிநீர் வசதி, சிமெண்ட் கல்தளம், மின்விளக்கு வசதி, சுகாதார வசதி மற்றும் இதர அடிப்படை வசதிகளை மேற்கொள்ளும் பொருட்டு ரூ.100.00 இலட்சம் (ரூபாய் நூறு லட்சம் மட்டும்) மதிப்பீட்டில் திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் பரிந்துரையின் பேரில் நகர் மற்றும் ஊரக மேம்பாட்டுத் துறைக்கு அனுப்பி வைப்பதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.697**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**12) <u>ம.பொ.4/004064/2014</u>**

மதுரை மாநகரில் பருவமழை பொய்த்து விட்ட காரணத்தினால் மதுரை மாநகராட்சிக்குட்பட்ட வார்டு பகுதிகளில் தற்போது குடிநீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. எனவே இதனை சரிசெய்யும் பொருட்டு அரசாணை எண்.89, வருவாய் (DMIII(1)) துறை நாள் : 24.02.2014 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையரக கடிதம் ந.க.எண்.4282/2013/இ 2, நாள் : 26.02.2014ன் அடிப்படையில் வறட்சி நிவாரணப் பணிகள் மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பணிகளில் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு பகுதிகளில் 500 இடங்கள் தேர்வு செய்யப்பட்டு ஆழ்துளை கிணறுகள் அமைக்கவும் தனியார் ஒப்பந்த லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யவும் குடிநீர் தேக்கத் தொட்டிகள் அமைக்கவும் மின் மோட்டார்கள் புதிதாக வாங்கவும் மற்றும் மின் மோட்டார் அறையினை புனரமைப்பு செய்யவும் ஒப்பந்த புள்ளிகள் வரவழைக்கப்பட்டு வேலை உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்நிலையில் மேற்கண்டவாறு வறட்சி நிவாரண பணிகளை மேற்கொள்வதற்கென ஒதுக்கப்பட்ட மானிய நிதி மீதமிருப்பதால் பொது நிதியின் கீழ் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு மாநகராட்சியின் நிதிநிலையினை கருத்தில் கொண்டு தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள பணிகளை பருவ மழை பொய்த்ததன் காரணமாக நிலத்தடி நீர் மட்டம் தொடர்ந்து குறைந்து விட்டது. பல ஆழ்துளை கிணறுகள் வறண்டு விட்டதாலும் மேலும் பொது மக்களின் குடிநீர் தேவையினை பூர்த்தி செய்வதற்கென மேற்கண்ட நிதியில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. பணிகளின் விபரம் பின்வருமாறு:

| வ. எண். | மதிப்பீட்டு எண் மற்றும் பணியின் விபரம் | பட்டியல் தொகை | ஒப்பந்தக்காரர் பெயர் |
|---|---|---|---|
| 1. | ம.பொ.5/ம.எண்.1271/12-13 வார்டு எண்.99, செக்கடித்தெருவில் ஆழ்துளைக் கிணறு அமைத்தல் | 216407 | திரு.T.சரவணன் |
| 2. | ம.பொ.5/ம.எண்.1268/12-13 வார்டு எண்.96, கோட்டை தெருவில் ஆழ்துளைக் கிணறு அமைத்தல் | 218400 | திரு.T.சரவணன் |
| 3. | ம.பொ.5/ம.எண்.2630/12-13 வார்டு எண்.8, இந்திரா நகர் மெயின் தெருவில் ஆழ்துளைக் கிணறு அமைத்தல் | 197287 | திரு.T.ராஜா |
| 4 | ம.பொ.5/ம.எண்.2400/12-13 வார்டு எண்.9, டோபி காலணியில் ஆழ்துளைக் கிணறு அமைத்தல் | 191791 | திரு.T.ராஜா |
| 5 | ம.பொ.5/ம.எண்.2399/12-13 வார்டு எண்.9, எம்.ஜி.ஆர் தெருவில் ஆழ்துளைக் கிணறு அமைத்தல் | 197343 | திரு.T.ராஜா |
| 6 | ம.பொ.5/ம.எண்.2401/12-13 வார்டு எண்.9, கிருஷ்ணா நகரில் ஆழ்துளைக் கிணறு அமைத்தல் | 178530 | திரு.T.ராஜா |
| 7 | ம.பொ.5/ம.எண்.2629/12-13 வார்டு எண்.8, இந்திர பிரியதர்ஷினி தெருவில் ஆழ்துளைக் கிணறு அமைத்தல் | 197135 | திரு.T.ராஜா |
| 8 | ம.பொ.5/ம.எண்.2160/12-13 பெரியார் நகர் மெயின் தெருவில் ஆழ்துளைக் கிணறு அமைத்தல் | 201375 | திரு.K.கணேசன் |
| 9. | ம.பொ.5/ம.எண்.2162/12-13 வார்டு எண்.60, அம்பேத்கார் நகர் ஜீவா நகரில் ஆழ்துளைக் கிணறு அமைத்தல் | 199573 | திரு.K.கணேசன் |
| 10. | ம.பொ.5/ம.எண்.1556/12-13 வார்டு எண்.60, சின்ன உடைப்பு மேல்நிலைத் தொட்டி அருகில் ஆழ்துளைக் கிணறு அமைத்தல் | 200603 | திரு.K.கணேசன் |
| 11. | ம.பொ.5/ம.எண்.2161/12-13 வார்டு எண்.60, சோனை கோவில் தெருவில் ஆழ்துளைக் கிணறு அமைத்தல் | 201375 | திரு.K.கணேசன் |
| 12. | ம.பொ.5/ம.எண்.1555/12-13 | 201375 | திரு.K.கணேசன் |

| | | | |
|---|---|---|---|
| | வார்டு எண்.60, மந்தையம்மன் கோவில் தெருவில் ஆழ்துளைக் கிணறு அமைத்தல் | | |
| 13. | ம.பொ.7/ம.எண்.8505/13<br>சர்வேயர் காலனி குடிநிரேற்று நிலையத்தில் 15 HP மோட்டார் பழுது நீக்குதல் | 85896 | M/s.Gopal Electrical Works |
| 14. | ம.பொ.4/ம.எண்.11511/13<br>பொதுப்பண்டக சாலையில் உள்ள 15 HP மோட்டார் பழுது நீக்குதல் | 85896 | M/s.Gopal Electrical Works |
| 15. | ம.பொ.4/ம.எண்.1257/12-13<br>வார்டு எண்.25, மேனேந்தல் பகுதியில் ஆழ்துளைக் கிணறு அமைத்தல் | 202135 | M/s.பாண்டி & கோ., |
| 16. | ம.பொ.5/ம.எண்.1985/12-13<br>வார்டு எண்.22, H.M.S காலனியில் ஆழ்துளைக் கிணறு அமைத்தல் | 212344 | M/s.குமரன் போர்வெல்ஸ் |
| 17. | ம.பொ.5/ம.எண்.2569/12-13<br>வார்டு எண்.98, காந்திஜி தெருவில் ஆழ்துளைக் கிணறு அமைத்தல் | 197423 | M/s.Marah Aqua System |
| 18. | ம.பொ.5/ம.எண்.2566/12-13<br>வார்டு எண்.98, உச்சபரம்பேடு ஆழ்துளைக் கிணறு அமைத்தல் | 204286 | M/s.Marah Aqua System |
| 19. | ம.பொ.5/ம.எண்.149/13-14<br>வார்டு எண்.5, வள்ளலார் மெயின் தெருவில் குடிநீர் குழாய் மெயின் அமைத்தல் | 186692 | திரு.S.நெடுமாறன் |
| 20. | Jn.S.2/Est.39567/06<br>பண்ணைப்பட்டி குடிநீர் சுத்திகரிப்பு நிலைய பராமரிப்பு பணிகள் | 2389218 | M/s.P & C Construction |
| 21. | ம.பொ.5/ம.எண்.2435/12-13<br>வார்டு எண்.80, V.P சதுக்கம் 2வது தெருவில் ஆழ்துளைக் கிணறு அமைத்தல் | 213452 | திரு.P.செல்வக்குமார் |
| 22. | ம.பொ.3/ம.எண்.569/13-14<br>வார்டு எண்.8, சிங்கம்பிடாரி கோவில் தெருவில் 160mm PVC குழாய் பதித்தல் | 74699 | திருமதி.P.தேன்மொழி |
| 23. | ம.பொ.4/ம.எண்.730/13-14<br>வார்டு எண்.41, பீ.பீ.குளம் சந்திப்பில் ஆழ்துளைக் கிணறு அமைத்தல் | 212219 | திரு.S.சஞ்சய் காந்தி |
| 24. | ம.பொ.4/ம.எண்.2537/12-13<br>வார்டு எண்.30, உள்ள மின்மோட்டார் அறையினை புனரமைப்பு செய்தல் | 209300 | திரு.T.L.குப்பு வெங்கடேஷ் |
| 25. | ம.பொ.3/ம.எண்.485/12-13<br>வார்டு எண்.70ல் உள்ள குதிரைக்கடை பகுதியில் ஆழ்துளைக் கிணறு அமைத்தல் | 114195 | திரு.N.மணிவண்ணன் |
| 26. | ம.பொ.5/ம.எண்.2565/12-13<br>வார்டு எண்.98 ல் உள்ள மாணிக்கம் நகர் பகுதியில் ஆழ்துளைக் கிணறு அமைத்தல் | 201267 | M/s.Marah Aqua System |
| 27. | ம.பொ.3/ம.எண்.1096/12-13<br>வார்டு எண்.58ல் உள்ள சிந்தாமணி மேலத்தெருவில் ஆழ்துளைக் கிணறு அமைத்தல் | 196693 | திரு.P.செந்தில்குமார் |
| 28. | ம.பொ.5/ம.எண்.1095/12-13<br>வார்டு எண்.58ல் உள்ள சிந்தாமணி கீழத்தெருவில் ஆழ்துளைக் கிணறு அமைத்தல் | 200200 | திரு.P.செந்தில்குமார் |
| 29. | ம.பொ.3/ம.எண்.1045/12-13<br>வார்டு எண்.62ல் சோணை பிள்ளைத் தெருவில் ஆழ்துளைக் கிணறு அமைத்தல் | 199970 | திரு.P.செந்தில்குமார் |
| | மொத்தம் | 7587079 | |

எனவே மேற்கண்டவாறு பொதுநிதியின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பணிகளை வறட்சி நிவாரணப் பணிகளுக்கென வழங்கப்பட்ட மேற்கண்ட மானியநிதியில் மேற்கொள்ள மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.698**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**13) Jn.S. 2/005364/2013**

Department of Internationl Development – UK நிதியுதவியுடன், மத்திய அரசின் வீட்டு வசதி வாரியம் மற்றும் வறுமை ஒழிப்பு அமைச்சகம் நாற்பது நகரங்களை தேர்வு செய்து முன் மாதிரியான வறுமை ஒழிப்புத் திட்டங்களை அமுல்படுத்த திட்டமிடப்பட்டது. அவ்வாறு தேர்வு செய்யப்பட்ட நகரங்களில் மதுரை மாநகர் ஒன்றாகும். அதன் அடிப்படையில் “Challenge Fund” என்ற தலைப்பின் கீழ் நிதி வழங்க மேற்படி அமைச்சகம் திட்டமிட்டு, முதற்கட்டமாக மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 10 இடங்கள் தேர்வு செய்யப்பட்டு சுகாதார வளாகம் & பாதுகாக்கப்பட்ட குடிநீர் இணைப்புகள் வழங்கவும் மற்றும் விழிப்புணர்வு வழங்கவும் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து கடந்த 27.02.2013 அன்று நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் (மாமன்றத் தீர்மானம் எண். 339) ஒப்புதல் பெறப்பட்டு மேற்கண்ட அமைச்சகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. இப்பணிகளை மேற்கொள்ள ரூ. 200.00 இலட்சம் (ரூபாய் இருநூறு லட்சம் மட்டும்) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஆணை (HUDCO-HSMI/Challenge Fund/2013, நாள். 21.10.2013) வரப்பட்டது. மேற்கண்ட நிதியில் மானியம் 25% சதவீதத் தொகையான ரூ. 62.50 இலட்சம் தொகையினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யுமாறு மேற்கண்ட அமைச்சகத்தின் மூலம் கோரப்பட்டது. அதன் அடிப்படையில் கடந்த 20.02.2014 அன்று நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் (மாமன்றத் தீர்மானம் எண். 586) ஒப்புதல் பெறப்பட்டது. தற்போது 10 இடங்களில் சுகாதார வளாகம் கட்டுவதற்கும் விழிப்புணர்வு முகாம் நடத்துவதற்கும் ரூ. 200.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் முதற்கட்டமாக 10 இடங்களில் பணிகளை மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டு ஒப்பந்தப்புள்ளி வரவழைக்க கடந்த 31.07.2014அன்று நடைபெறவுள்ள மாமன்றகூட்டத்தில் (மாமன்ற தீர்மானம் எண்.663) ஒப்புதல் பெறப்பட்டும் மதிப்பீடுகள் அனைத்தும் நடப்பாண்டு விலைவிகிதம் (2013–2014) அடிப்படையில் திருத்தம் செய்யப்பட்டு ஒரு கட்டிடத்திற்கு ரூ.74.70 வீதம் 10 இடங்களில் கட்டுவதற்கு ரூ.247.00 இலட்சம் மற்றும் நிர்வாக செலவினம் மற்றும் விழிப்புணர்வு முகாம் நடத்துதல் போன்ற செலவீனம் ரூ.12.00 இலட்சம் சேர்த்து மொத்தம் ரூ.259.00 இலட்சத்திற்கு( இருநூற்று ஐம்பத்தி ஒன்பது லட்சம் மட்டும்) கடந்த 07.08.2014 அன்று ஒப்பந்தப்புள்ளி வரவழைக்கப்பட்டு கீழ்க்கண்ட மதிப்பீடுகளுக்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு, ஒப்புநோக்கு செய்யப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு:

| வ. எண். | வார்டு எண். | மதிப்பீட்டு எண் மற்றும் பணியின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சம்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகித விபரம் |
|---|---|---|---|---|---|
| 1. | 3 | ம.பொ. 4/ம.எண். 38/14–15 கோசாகுளம் குடிசைப் பகுதியில் நவீன சுகாதார வளாகம் கட்டுதல் | 24.70 | திரு.T.சரவணன் | மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு சமம் |
| 2. | 3 | ம.பொ. 4/ம.எண். 39/14–15 சிலையனேரி குடிசைப் பகுதியில் நவீன சுகாதார வளாகம் கட்டுதல் | 24.70 | திரு.T.சரவணன் | மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு சமம் |
| 3. | 8 | ம.பொ. 4/ம.எண். 40/14–15 மேலக் கைலாசபுரம் குடிசைப் பகுதியில் நவீன சுகாதார வளாகம் கட்டுதல் | 24.70 | திரு.நெடுமாறன் | மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு சமம் |
| 4. | 28 | ம.பொ. 4/ம.எண். 41/14–15 உத்தங்குடி குடிசைப் பகுதியில் நவீன சுகாதார வளாகம் கட்டுதல் | 24.70 | திரு.V.பாண்டி | மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு சமம் |
| 5. | 56 | ம.பொ. 4/ம.எண். 42/14–15 இந்திரா நகர் குடிசைப் பகுதியில் நவீன சுகாதார வளாகம் கட்டுதல் | 24.70 | திரு.N.S. செல்லப்பாண்டி | மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு சமம் |
| 6. | 60 | ம.பொ. 4/ம.எண். 42/14–15 சின்ன உடைப்பு குடிசைப் பகுதியில் நவீன சுகாதார வளாகம் கட்டுதல் | 24.70 | திரு.N.S. செல்லப்பாண்டி | மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு சமம் |
| 7. | 94 | ம.பொ. 4/ம.எண். 46/14–15 வெள்ளைக்கல் குடிசைப் பகுதியில் நவீன சுகாதார வளாகம் கட்டுதல் | 24.70 | திரு.S.ரத்தினம் | மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு சமம் |

| வ. எண். | வார்டு எண். | மதிப்பீட்டு எண் மற்றும் பணியின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சம்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகித விபரம் |
|---|---|---|---|---|---|
| 8. | 96 | ம.பொ. 4/ம.எண். 47/14–15 திருமலையூர் குடிசைப் பகுதியில் நவீன சுகாதார வளாகம் கட்டுதல் | 24.70 | திரு.S.ரத்தினம் | மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு சமம் |

மேற்கண்டவாறு திருத்திய மதிப்பீட்டுத் தொகை ரூ. 259.00 இலட்சத்தில் மானியம் ரூ.200 இலட்சம் போக மீதமுள்ள ரூ.59.00 இலட்சத்தினை மாநகராட்சிப் பொது நிதியிலிருந்து ஈடு செய்து கொள்ள உரிய நிர்வாக ஒப்புதல் வேண்டியும் மேற்கண்ட பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி தெரிவித்துள்ள ஒப்பந்தக்காரர்களின் விலை விகிதத்தினை ஏற்று வேலை உத்தரவு வழங்கவும் மாமன்றக் கூட்டத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.699**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**14) JnS5/33640/08**

மதுரை மாநகராட்சி ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டங்களுக்கு கீழ்கண்ட விபரப்படி மத்திய, மாநில மற்றும் மாநகராட்சி பங்களிப்பிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதில் மாநில அரசின் பங்குத் தொகையான 20% வட்டியில்லா கடனாக ஒதுக்கீடு செய்யப்பட்டு இதுவரை நகர்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனத்திடம் இருந்து நான்கு தவணைகளாக ரூ.123.17 கோடி பெறப்பட்டுள்ளது.

(ரூ.கோடியில்)

| வ. எண் | திட்டத்தின் பெயர் | மதிப்பீடு தொகை | மானியம் 50% | வட்டியில்லா கடன் 20% | மாநகராட்சி பங்களிப்புத் தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | இரண்டாம் வைகை குடிநீர் திட்டம் | 71.23 | 29.66 | 11.86 | 29.71 |
| 2 | வைகை ஆற்றின் குறுக்கே தடுப்பணைகள் கட்டுதல் | 9.40 | 2.39 | 0.95 | 2.77 |
| 3 | திடக்கழிவு மேலாண்மை திட்டம் | 75.99 | 37.14 | 14.86 | 23.99 (6.95 + 17.04 PPP mode) |
| 4 | மழைநீர் வடிகால் திட்டம் | 348.13 | 125.90 | 50.36 | 172.04 |
| 5 | பாதாளச் சாக்கடைத் திட்டம் | 252.20 | 114.67 | 45.87 | 88.66 |
| | **மொத்தம்** | **756.95** | **309.76** | **123.90** | **300.13 (317.17-17.04)** |

மேற்கண்ட பணிகளுக்கு நகர்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனம் (TUFIDCO) கடித எண். TUFIDCO / DCB / JnNURM /Q1M (P) 2014 -15 Date. 09.09.2014-ல் மாநில அரசின் பங்குத் தொகையான 20% வட்டியில்லா கடனாக ஒதுக்கீடு செய்து பெறப்பட்ட நாள் முதல் 30.09.2014 வரை கீழ்காணும் தொகையினை செலுத்த கோரப்பட்டுள்ளது. மொத்த கேட்புத் தொகை ரூ.123.17 கோடியை காலாண்டு தவணையில் 5 வருடங்களுக்கு செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது.

| கடன் எண். | அசல் | | மொத்தம் | கேட்பு | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | நிலுவை | நடப்பு | | நிலுவை | நடப்பு | | கடன் நிலுவை |
| Vaigai J0607-0001 | 25421142 | 4236857 | 29657999 | 25421142 | 4236857 | 29657999 | 110148386 |
| Check Dam J0607-0016 | 2044284 | 340714 | 2384998 | 2044284 | 340714 | 2384998 | 8858671 |
| SWM J0607-0007 | 31838574 | 5306429 | 37145003 | 31838574 | 5306429 | 37145003 | 150459214 |
| SWD J0607-0017 | | | | | | | 503620400 |
| UGSS J0708-0022 | | | | | | | 458634000 |
| **Total** | **59304000** | **9884000** | **69188000** | **59304000** | **9884000** | **69188000** | **1231720671** |

மேற்படி ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டங்களில் நடைபெற்று வரும் பணிகளுக்கு ஏற்கனவே மாநகராட்சி பங்குத் தொகை 30% ரூ.300.13 கோடி செலுத்த இயலாத நிலையில், மாநகராட்சி நிதிநிலைமையைக் கருத்தில் கொண்டு தமிழக அரசு சிறப்பு

நிதியாக தொகை ரூ. 250.00 கோடி ஒதுக்கீடு செய்து பெறப்பட்டுள்ளது. மேலும் மதுரை மாநகராட்சி உடன் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளுக்கு குடிநீர், சாலைகள், தெருவிளக்கு, திடக்கழிவு மேலாண்மை, பாதாளச் சாக்கடை மற்றும் மழைநீர் வடிகால் ஆகிய அத்தியாவசிய பணிகளுக்கு தேவையான பராமரிப்பு செலவுகளுக்கு, இம்மாநகராட்சியின் வருவாய் போதியதாக இல்லாத நிலையில், இம்மாநகராட்சியின் பொதுநிதியில் இருந்து மேற்படி கடன் தொகையை திரும்ப வழங்க இயலாதநிலை உள்ளது. எனவே தற்பொழுது மதுரை மாநகராட்சியின் நிதி நிலைமையினைக் கருத்தில் கொண்டு மாநில அரசின் வட்டியில்லாக் கடன்தொகை 20% கடனாக காலாண்டுத் தவணையில் செலுத்தக் கோருவதை தவிர்த்து, முழு மானியத் தொகையாகவே பாவித்து உத்தரவு வழங்ககோரி அரசுக்கு உரிய பிரேரணை அனுப்ப மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

<u>மாமன்றத்தீர்மானம் எண்.700</u>

<u>பொருளில் குறிப்பிட்டுள்ளபடி அரசுக்கு பிரேரனை அனுப்ப குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.</u>

**15) <u>JnS5/33640/08</u>**

மதுரை மாநகராட்சி ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு (JnNURM) திட்டங்களுக்கு மத்திய மற்றும் மாநில அரசு ஒதுக்கீடு செய்த நிதி தமிழ்நாடு நகர்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டு (TUFIDCO) நிறுவனம் மூலம் நகர்புற உட்கட்டமைப்பு ஆளுமை (UIG) திட்டங்களை செயல்படுத்த இம்மாநகராட்சிக்கு நிதி வழங்கப்பட்டது. இந்நிதியை தேவைப்படும் போது வேலைகளுக்கு பயன்படுத்திக் கொள்ளவும் செலவீனங்கள் நேராத பட்சத்தில் அதுவரை குறுகிய கால முதலீடு செய்து அதில் கிடைக்கப்பெறும் வட்டி தொகையை தமிழ்நாடு நகர்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டு (TUFIDCO) நிறுவனத்திற்கு வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி நகர்புற உட்கட்டமைப்பு ஆளுமை (UIG) திட்டத்தில் இருந்து முதலீடு செய்யப்பட்ட தொகையில் ரூ.1.67 கோடி வட்டியாக கிடைக்கப்பெற்றுள்ளது. இதில் கிடைக்கப்பெற்ற வட்டி தொகையில் இருந்து அவசர அவசியம் கருதி இரண்டாம் வைகை குடிநீர் திட்டத்திற்கு ரூ.1.00கோடி, ஊதியம் மற்றும் பிற செலவீனங்களுக்கு ரூ.29.00 இலட்சமும் மற்றும் வெவ்வேறு பணிகளுக்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்வதற்கு ரூ.38.00 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட தொகையை தமிழ்நாடு நகர்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டு (TUFIDCO) நிறுவனத்திற்கு வழங்க இயலாத நிலை உள்ளது.

எனவே ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு (JnNURM) திட்டத்தில் பெறப்பட்ட முதலீடு மீதான வட்டி தொகை ரூ.1.67 கோடியை மேற்கண்ட விபரப்படி செலவு செய்ததை ஈடு செய்துகொள்ள உத்தரவு வழங்க தமிழ்நாடு நகர்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டு (TUFIDCO) நிறுவனத்தை கேட்டுக் கொள்ள மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

<u>மாமன்றத்தீர்மானம் எண்.701</u>

<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.</u>

**16) <u>RR1/20587/12</u>**

மதுரை மாநகராட்சியின் பராமரிப்பிலுள்ள உள்வட்டச்சுற்றுச்சாலையில் ( உத்தங்குடி முதல் கப்பலூர் வரை செல்லும் வாகனங்களுக்கு சுங்க கட்டணம் வசூல் செய்து கொள்ள மாமன்ற தீர்மானம் எண்: 225 நாள் : 09.06.2000 மற்றும் அரசாணை எண்: 149 நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 23.10.2000ன் படி 01.11.2000 முதல் 31.10.2015 முடிய வசூல் செய்ய அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. வசூலித்த கட்டணத்தை 15 வருட காலத்திற்குள் தவணை முறையில் கடன்தொகை செலுத்துவதற்கும் கடன் தொகை செலுத்த முடியாத பட்சத்தில் மேலும் இரண்டு வருடங்களுக்கு சுங்கக்கட்டணம் வசூல்செய்ய அனுமதி அளிக்கப்பட்டுள்ளது என்று விபரம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேற்படி அரசாணை வழிகாட்டுதல் படி ஒவ்வொரு ஆண்டும் 8% சுங்க வரியை உயர்வு செய்து மாநகராட்சி மாமன்ற அனுமதியுடன் சுங்க கட்டணம் வசூல் செய்வதற்கு அனுமதி வழங்கி அரசு ஆணையிடப்பட்டுள்ளது.

01.11.2014 முதல் 31.10.2015 முடிய உள்வட்டச்சுற்றுசாலையில் செல்லும் வாகனங்களுக்கு தற்போது வசூல் செய்து வரும் கட்டணத்தில் 8% சுங்க வரியை உயர்வு செய்து வசூல்செய்ய மாமன்றத்தின் ஒப்புதலைக்கோரும் ஆணையாளரின் குறிப்பு.

<u>குறிப்பு:</u>

1. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்: 149 நாள் : 23.10.2000 குறிப்பிட்டுள்ளபடி 5 ஆண்டுகள் முடிந்த பின்னர் ஒவ்வொரு ஆண்டிற்கும் 8% சுங்க வரியை உயர்வு செய்யும் முறையை நடைமுறைப்படுத்தலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

2. மேற்படி அரசாணையில் 10 (இ)ல் கடனுக்காக வசூல் செய்யும் சுங்க கட்டணத்தை நடப்பு ஆண்டுக்கும் (2014–15) 8% சுங்க வரியை கூடுதல் கட்டணம் நிர்ணயம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது.
3. தற்போதுள்ள சுங்க கட்டண விகிதங்களை 8%' சுங்க வரியை உயர்வு செய்யப்பட்ட கட்டண விபரப்பட்டியலை ஒப்புதல் செய்யலாம்.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.702</u>**

**<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.</u>**

**(ஒம்...) வி.வி.ராஜன் செல்லப்பா,**
**மேயர்**
**மதுரை மாநகராட்சி**

**மதுரை**
**நாள் : 23.09.2014**

# மதுரை மாநகராட்சி
## மாமன்றக் கூட்டம்
## Table Agenda - நாள் : 25.09.2014

**1) ம. பொ. 4/ 21398 /2014**

மதுரை மாநகராட்சிக்கு குடிநீர் வழங்கும் திட்டங்கள், வைகை அணை அல்லது வைகை ஆற்றுப்படுகையினை ஆதாரமாக கொண்ட திட்டங்களாகவே உள்ளன. இது தவிர தற்போது புதிதாக இணைக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளுக்கு கரிவிரி ஆற்றுப்டுகையினை குடிநீர் ஆதாரமாக கொண்ட திட்டம் செயலாக்கம் செய்யப்பட்டு வருகின்றது.

1980 வரை குடிநீர் தேவையினை பூர்த்தி செய்வதற்கு வைகை அணையில் 600மில்லியன் கன அடி நீர் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இவ்வாறு ஒதுக்கீடு செய்யப்பட்ட நீர் வைகை ஆற்றுப்படுகையில் அமைக்கப்பட்டிருந்த நீர் ஆதாரங்களான மேலக்கால், கோச்சடை நீர் சேகரிப்பு கிணறு, கோச்சடை நீர் உறிஞ்சும் கிணறு போன்ற நீர் ஆதாரங்களை வளப்படுத்துவதற்காக தேவையான நேரத்தில் வைகை அணையிலிருந்து திறந்து விடப்பட்டு குடிநீர் வழங்கப்பட்டது. கடந்த 1970 முதல் 1990ம் ஆண்டு வரை நகரமயமாக்குதலின் கீழ், மதுரை மாநகர் மிகப் பெரிய வளர்ச்சியனை எட்டியது. இந்த காலக்கட்டத்தில் மக்கள் தொகையும் கணிசமாக உயர்ந்த நிலை ஏற்பட்டது.

மக்கள்தொகை பெருக்கத்திற்கேற்ப குடிநீர் தேவையினை பூர்த்தி செய்வதற்கு வைகை அணையில் வருடம் ஒன்றுக்கு ஒதுக்கப்பட்ட 600 மில்லியன் கன அடி என்பதனை 1500 மில்லியன் கன அடி என்று கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்பட்டது (அரசாணை எண். 878, நாள். 04.06.1985). மேலும் அவ்வாறு ஒதுக்கப்பட்ட நீரினை 900 மில்லியன் கன அடி குழாய் மூலம் வைகை அணையிலிருந்து எடுக்கப்பட்டு சுத்திகரிப்பு செய்து 68 MLD கிடைக்கப் பெறுமான திட்டம் 1995ம் ஆண்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது. பின்னர் வைகை ஆற்றுப்படுகையின் வழியே நீர் ஆதாரங்களை வளப்படுத்துவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட மீதமுள்ள 600 மில்லியன் கன அடி நீரை சேதாரங்களை தவிர்ப்பதற்காக குழாய் மூலம் கொண்டு வரும் திட்டம் உருவாக்கப்பட்டு செயலாக்கம் செய்யப்பட்டது.

தற்போதைய ஒருங்கிணைந்த மதுரை மாநகராட்சி 100 வார்டுகளைக் கொண்டதாகவும் மக்கள்தொகை சுமார் 16.00 இலட்சம் கொண்டதாகவும் இருக்கிறது. மேலும் வரும் 2021, 2036 மற்றும் 2051ம் ஆண்டுகளுக்கு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன் பேரில் மதுரை மாநகராட்சியின் இன்றைய குடிநீர் தேவையினை பூர்த்தி செய்வதற்கு ஆண்டு ஒன்றுக்கு சுமார் 800 மில்லியன் கன அடி நீர் கூடுதலாக தேவைப்படும் என்ற நிலை உள்ளது. மேற்கண்ட கூடுதல் குடிநீரினை பெறுவதற்கு முல்லை பெரியார் அணையிலிருந்து பெறப்படும் குடிநீரினை ஆதாரமாகக் கொண்டு செயலாக்கம் செய்யப்படும் திட்டம் ஒன்றே இசைவானதாகவும் குறைவான திட்ட மதிப்பீடு மற்றும் பராமரிப்பு செலவு உள்ளதாகவும் இருக்குமென கண்டறியப்பட்டது.

இத்திட்டத்தின் படி முல்லை பெரியார் அணை (லோயர் கேம்ப்) புனல்நீர் மின்சார நிலையத்திலிருந்து நீர் எடுக்கப்பட்டு பின் கூடலூார், கம்பம், தேனி, வைகை அணை குள்ளபுரம், A. வாடிப்பட்டி வழியே பண்ணைப்பட்டி சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு வரவும் பின்னர் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் கண்ணாபட்டி, அணைப்பட்டி, தேனுார் வழியே மதுரை மாநகரினை வந்தடையும் வகையில் தனியார் திட்ட ஆலோசகர் நியமனம் செய்யப்பட்டு ரூ. 580.00 கோடி மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு கடந்த 31.07.2014 அன்று நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் (மாமன்றத் தீர்மானம் எண். 680) ஒப்புதல் பெறப்பட்டு, அரசின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

மேலும் மதுரை மாநகராட்சியின் தற்போதைய குடிநீர் தேவையினை பூர்த்தி செய்வதற்கு பெரியார் அணையில் கூடுதலாக 800 மில்லியன் கன அடி நீர் ஒதுக்கீடு செய்வதற்கு ரூ. 580.00 கோடியினை அரசின் மானியமாக பெற்று பணியினை மேற்கொள்வதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.703**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## 2) <u>ம. பொ. 4/ 29989 /2014</u>

மதுரை மாநகராட்சி, சாலை போக்குவரத்து அபிவிருத்தி திட்டத்திற்கென "ஒருங்கிணைந்த போக்குவரத்து மேம்பாட்டுத் திட்டம்" அறிக்கை தயாரிக்கப்பட்டது. இதில் மதுரை மாநகரில் போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்கு ஆறு இடங்களில் மேம்பாலங்கள் அமைக்க பரிந்துறை செய்யப்பட்டுள்ளது. அருள்தாஸ்புரம் மற்றும் சிம்மக்கல் ஆகிய இடங்களில் வைகை ஆற்றின் குறுக்கே இரண்டு உயர்மட்ட பாலங்கள் அமைக்க நகர் மற்றும் ஊரகத் திட்டத் (Town and Country Planning) துறையின் மூலம் Infrastructure and Amenities நிதியின் கீழ் ரூ.30.40 கோடி மானியம் பெறப்பட்டுள்ளது. இப்பணிகள் விரைவில் நடைபெற உள்ளது.

இதனைப் போன்று ஒபுளாபடித்துறை பகுதி தரைமட்டப் பாலத்தினை உயர்மட்டப் பாலமாக மாற்றியமைக்க ரூ. 15.00 கோடி மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. விரிவான திட்ட அறிக்கை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கவும் மேற்கண்ட மதிப்பீட்டுத் தொகையான ரூ. 15.00 கோடியினை நகர் மற்றும் ஊரகத் திட்டத் (Town and Country Planning) துறையின் மூலம் Infrastructure and Aminities Development Fundன் கீழ் மானியமாக பெற்று பணியினை மேற்கொள்ள மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

<u>**மாமன்றத்தீர்மானம் எண்.704**</u>
<u>**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**</u>

## 3) <u>ம. பொ. 4/ 29990 /2014</u>

மதுரை மாநகராட்சி, சாலை போக்குவரத்து அபிவிருத்தி திட்டத்திற்கென "ஒருங்கிணைந்த போக்குவரத்து மேம்பாட்டுத் திட்டம்" அறிக்கை தயாரிக்கப்பட்டது. இதில் மதுரை மாநகரில் போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்கு ஆறு இடங்களில் மேம்பாலங்கள் அமைக்க பரிந்துறை செய்யப்பட்டுள்ளது. அருள்தாஸ்புரம் மற்றும் சிம்மக்கல் ஆகிய இடங்களில் வைகை ஆற்றின் குறுக்கே இரண்டு உயர்மட்ட பாலங்கள் அமைக்க நகர் மற்றும் ஊரகத் திட்டத் (Town and Country Planning) துறையின் மூலம் Infrastructure and Amenities நிதியின் கீழ் ரூ.30.40 கோடி மானியம் பெறப்பட்டுள்ளது. இப்பணிகள் விரைவில் நடைபெற உள்ளது.

இதனைப் போன்று குருவிக்காரன் சாலை பகுதி தரைமட்டப் பாலத்தினை உயர்மட்டப் பாலமாக மாற்றியமைக்க ரூ. 16.50 கோடி மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. விரிவான திட்ட அறிக்கை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கவும் மேற்கண்ட மதிப்பீட்டுத் தொகையான ரூ. 16.50 கோடியினை நகர் மற்றும் ஊரகத் திட்டத் (Town and Country Planning) துறையின் மூலம் Infrastructure and Aminities Development Fundன் கீழ் மானியமாக பெற்று பணியினை மேற்கொள்ள மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

<u>**மாமன்றத்தீர்மானம் எண்.705**</u>
<u>**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**</u>

## 4) <u>ம. பொ. 4/ 29987 /2014</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகளின் செயலாகத்தில் தெரிவித்துள்ளவாறு, மாநகராட்சிக்குட்பட்ட வார்டுப் பகுதிகளில் சாலையின் பெயர் மற்றும் விபரங்கள் அடங்கிய இருட்டில் ஒளிரும் பெயர் பலகைகள் கடந்த 2012–13ம் நிதியாண்டில் மேற்கொள்ள உத்திரவிடப்பட்டுள்ளது, மேற்கண்ட உத்தரவின் அடிப்படையில் மதுரை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் இருட்டில் ஒளிரும் பெயர் பலகைகள் அமைப்பதற்கு நான்கு மண்டலத்திற்கும் சேர்த்து ரூ. 379.00 இலட்சத்தில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட பலகைகள் அமைத்தது போக விடுப்பட்டுள்ள வார்டுப் பகுதிகளில் பெயர் பலகைகள் அமைக்க மதிப்பீடு தயார் செய்யவும் மாநகராட்சியின் நிதி நிலையினைக் கருத்தில் கொண்டு இப்பணியினை அரசின் மானியமாக பெறவும் அல்லது பொது நிதியில் நிறைவேற்றவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

<u>**மாமன்றத்தீர்மானம் எண்.706**</u>
<u>**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**</u>

## 5) <u>ம.பொ. 4/22948/2014</u>

மதுரை மாநகராட்சிக்கு சொந்தமான சுற்றுச்சாலையினை தேசிய நெடுஞ்சாலைக்கு இணையாக உயர்த்துவதற்கு திட்டமிடப்பட்டு ஏற்கனவே சுங்கச்சாவடிகள் மற்றும் சுங்கச்சாவடிகள் அமைந்துள்ள பகுதிகள் மட்டும் நான்கு வழிப்பாதைகளாக அகலப்படுத்தி தடுப்புச்சுவர் அமைக்கப்பட்டது. தற்போது உள்ள சாலை இருவழிச் சாலையாக இருக்கின்ற காரணத்தினால் விபத்துக்கள் ஏற்படும் காலங்களில் அவசர கால பணிகள் ஏதும் செய்ய இயலாத நிலை உள்ளது.

எனவே, சுங்கவரியில் உள்ள உபரி நிதியினை பெற்று சுற்றுச்சாலையின் இருபுறங்களிலும் தடுப்புச்சுவர் அமைத்து அகலப்படுத்த திட்டமிடப்பட்டு ரூ. 45.00 கோடிக்கு ஒன்பது சிப்பங்களாக பிரிக்கப்பட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

இப்பணிகளுக்கு தேவையான தொகை சுற்றுச்சாலைக் கணக்கில் உள்ள உபரி நிதி ரூ. 35.00 கோடி பெறப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகையான ரூ. 10.00 கோடியினை டிசம்பர் 2014 மாதம் வரை கிடைக்கவிருக்கும் உபரி நிதியிலிருந்து ஈடு செய்து கொள்ளவும் மேற்கண்ட மதிப்பீட்டு பணிகளுக்கு நகராட்சி நிர்வாக ஆணையரின் நிர்வாக ஒப்புதலும் தொழில்நுட்ப ஒப்புதலும் பெற்று உரிய முறையில் ஒப்பந்தப்புள்ளி வரவழைக்கவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.707**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## 6) ம. பொ. 4/ 29991 /2014

மதுரை மாநகராட்சிக்குட்பட்ட வார்டுப் பகுதிகளில் பல்வேறு இடங்கள் தனியார் மற்றும் பல்வேறு அமைப்புகளின் மூலம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது. எனவே நான்கு மண்டலங்களிலும் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான காலியிடத்தினை கண்டறிந்து ஆக்கிரமிப்புகளை உடனடியாக அகற்றவும் காலியாகவுள்ள இடத்தில் மாநகராட்சி சார்பாக வணிக வளாகங்கள் கட்டி மாதந்திர வாடகை அடிப்படையில் விடப்படும் பட்சத்தில் மாநகராட்சியின் வருவாயினை பெருக்குவதற்கு ஏதுவாக இருக்கும் என்ற கருத்தின் அடிப்படையில் மாநகராட்சிக்குட்பட்ட வார்டுப் பகுதிகளில் உள்ள ஆக்கிரமிப்பு இடங்களை கண்டறிந்து உடனடியாக அகற்றவும் காலியாக உள்ள இடங்களில் வணிக வளாகங்கள் அமைக்கவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.708**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## 7) ம.பொ. 4 / 030052 / 2014

மதுரை மாநகராட்சியின் குடிநீர் தேவையினை பூர்த்தி செய்வதற்கு வைகை அணையில் 1500 மில்லியன் கன அடி நீர் அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இவ்வாறு ஒதுக்கீடு செய்யப்பட்ட குடிநீரில் 900 மில்லியன் கன அடி குடிநீரை 1100mm விட்டமுள்ள குழாய் மூலம் 16.60 கி.மீ. தொலைவிலுள்ள பண்ணைப்பட்டி சுத்திகரிப்பு நிலையம் வரை கொண்டு வரப்பட்டு, பின்னர் சுத்திகரிப்பு செய்த குடிநீரை குழாய் மூலம் 48.80 கி.மீ. தொலைவிலுள்ள மதுரை மாநகராட்சிப் பகுதிக்கு, தானாகவே குடிநீர் தொட்டிகளில் ஏறும் வண்ணம் திட்டம் 1995-ம் ஆண்டு முதல் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது. இத்திட்டத்தினை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் செப்டம்பர் 2001-ம் ஆண்டு வரை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டும் அதன் பின்னர் அக்டோபர் 2001-ம் ஆண்டு முதல் மதுரை மாநகராட்சி, பராமரிப்பு பணிகளை மேற்கொண்டும் வருகின்றது. இப்பராமரிப்பு பணிகளை மதுரை மாநகராட்சி செயல்படுத்துவதற்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந 2) துறை அரசாணை (நிலை) எண். 208, நாள். 17.09.1999–ல் 26 பணியிடங்கள் தோற்றுவிக்கவும் மதுரை மாநகராட்சி பணியாளர்கள் திறன் எய்தும் வரையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திலிருந்து தேவைகேற்ப அயற்பணி அடிப்படையில் பணியாளர்களை வரவழைத்துக் கொள்ளவும் மேலும் பைப் லைன்களை கண்காணிக்க TEXCO அமைப்பின் மூலம் பணியாளர்களை பெற்று செயல்படுத்த அனுமதி அளித்துள்ளது. மதுரை மாநகராட்சி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திலிருந்து பணியாளர்களை அயற்பணியில் பெற்றும், பைப் லைன்களின் பராமரிப்பு பணிக்காக பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பெற்றும், பண்ணைப்பட்டி சுத்திகரிப்பு நிலையம் மற்றும் பிரதானக் குழாய்களை பராமரிப்பு பணிகளுடன், வைகை குடிநீர் திட்டத்தில் பெறப்படும் குடிநீரை வால்வுகளில் இயக்கி பல்வேறு பகுதிகளுக்கு பிரித்து வழங்குதல் போன்ற பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திலிருந்து பெறப்பட்ட பணியாளர்கள் படிப்படியாக தாய்த் துறைக்கு திரும்பிய நிலையில் மேற்கண்ட அதே ஒப்பந்தப் பணியாளர்களைக் கொண்டு தொடர்ந்து பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் வைகை அணையில் மீதமுள்ள 600 மில்லியன் கன அடி குடிநீரை, குழாய் மூலம் நவீன முறையில் பண்ணைப்பட்டி சுத்திகரிப்பு நிலையத்தில் சுத்தம் செய்து மற்றொரு பிரதானக் குழாய் மூலம் மதுரை மாநகருக்கு 47 மில்லியன் லிட்டர் வழங்குவதற்கு இரண்டாவது வைகை குடிநீர்த் திட்டம் செயல்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது. இந்நிலையில் இத்திட்டப் பராமரிப்பு பணியினையும் சேர்த்து குறைந்தளவு ஆனால் திறமையான அனுபவமுள்ள மேற்கண்ட

அதே ஒப்பந்தப் பணியாளர்களைக் கொண்டு குறைந்தளவு பராமரிப்பு செலவில் இது நாள் வரை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்நிலையில், இரண்டு வைகை குடிநீர் திட்டங்களையும் சேர்த்து பராமரிப்பு பணிகளை செய்வதற்கு கூடுதலாக பணியிடங்கள் தோற்றுவிக்க மாமன்றத்தின் (மாமன்ற தீர்மானம் எண். 313, நாள். 09.01.2013) ஒப்புதல் பெற்று அரசுக்கு பிரேரணை அனுப்பப்பட்டுள்ளது. இரண்டு வைகை குடிநீர் திட்டங்களும் மதுரை மாநகராட்சியின் முக்கிய குடிநீர் ஆதாரங்களாகும். இவ்விரு குடிநீர் திட்டங்களைக் கொண்டு மதுரை மாநகராட்சியின் பழைய பகுதிகளுக்கு ஒரு நாள் விட்டு ஒரு நாள் குடிநீர் வழங்கும் முறை அமுல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் 1100mm முதல் 800mm விட்டமுள்ள PSC குழாய்கள் வரை ஏற்படும் கசிவுகள் / உடைப்புகள் உடனுக்குடன் சரிசெய்யப்பட வேண்டும். இதில் ஏதேனும் தொய்வு ஏற்படும் பட்சத்தில் மாநகராட்சிப் பகுதிகளின் பெரும்பகுதியில் குடிநீர் வழங்க இயலாத நிலை ஏற்படும். எனவே இத்திட்டத்தினை முறையாக பராமரிப்பதற்கு இத்திட்டத்தின் பிரதான PSC குழாய்களின் பராமரிப்பில் முன் அனுபவமுள்ள பணியாளர்கள் அவசியம். தற்போது உள்ள பணியாளர்கள், இத்திட்டத்தின் பராமரிப்பு பணியினை கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக செய்து வருவதால் மிகுந்த அனுபவம் உள்ளவர்களாக திகழ்கின்றனர். இவர்கள் வைகை அணை முதல் மதுரை மாநகராட்சி வரையுள்ள பிரதானக் குழாய்களின் தன்மையினை நன்கு அறிந்தவர்கள் என்பதால் குறைந்தளவு ஒப்பந்தப் பணியாளர்களைக் கொண்டு மேற்கண்ட பணி திறம்பட செய்து வரப்படுகின்றது. இவர்கள் பல்வேறு ஒப்பந்தக்காரர்களிடம் பணியாளர்களாக தொடர்ந்து பணியாற்றி வருகின்றனர். பணியாளர்களின் விபரம் பின்வருமாறு:

| வ. எண். | பணியாளர் பெயர் | பிறந்த தேதி | வேலைவாய்ப்பு பதிவு எண் |
|---|---|---|---|
| 1. | திரு.P. முருகன் | 25.05.1977 | 11482/2004 |
| 2. | திரு.S. பொன்னுபாண்டி | 20.05.1969 | 11627/2005 |
| 3. | திரு.R. சசிகுமார் | 02.06.1975 | 16779/2000 |
| 4. | திரு.G. விஜயன் | 13.03.1982 | 31402/1997 |
| 5. | திரு.J. மகாதேவன் | 11.05.1982 | 30952/2012 |
| 6. | திரு.G. மணிகண்டன் | 11.04.1983 | 1832/2004 |
| 7. | திரு.S. காட்டுராஜா | 15.05.1980 | 11505/2006 |
| 8. | திரு.P. ஆனந்த பத்மநாபசிவா | 04.05.1976 | 7754/2004 |
| 9. | திரு.R. சந்திரமோகன் | 15.05.1985 | 2381/2002 |
| 10. | திரு.S. செந்தில்குமார் | 26.12.1978 | 1949/1996 |
| 11. | திரு.A. குருமூர்த்தி | 03.05.1984 | 6396/2000 |
| 12. | திரு.V. கிருஷ்ணபிரசாத் | 18.05.1975 | 1979/2008 |
| 13. | திரு.S. அஸ்ரப் அலி | 06.12.1976 | 1503/1997 |
| 14. | திரு. கலீல் ரஉற்மான் | 25.03.1985 | 737/2008 |
| 15. | திரு.K. மருதமுத்து | 17.04.1980 | 3520/1998 |
| 16. | திரு.M. கண்ணன் | 15.05.1978 | 12008/2013 |

இப்பணியாளர்கள் PSC பைப், GRP பைப் மற்றும் HDPE பைப் ஆகிய குழாய்களில் ஏற்படும் நீர் கசிவு மற்றும் வெடிப்புகளை சரி செய்து திறம்பட பராமரிப்பு பணிகளை மேற்கொள்பவர்கள். எனவே மேற்கண்ட குழாய்கள் ஏற்படும் கசிவுகளை சரி செய்ய தனியார் நிறுவனங்களை நாடும் நிலை ஏற்படவில்லை. மேலும் 24 மணி நேரமும் குடிநீர் சேதாரமின்றி மதுரைக்கு கொண்டு வருவதால் மட்டுமே சீரான குடிநீர் வழங்கும் நிலை உள்ளது. மேலும் இப்பணியாளர்கள் குடிநீர் திட்ட வழித்தடத்தின் வழியே குடியிருந்து வருவதாலும் உடனடியாக பராமரிப்பு பணி மேற்கொள்ள ஏதுவாக உள்ளது. இந்நிலை தொடர அனுபவம் வாய்ந்த இவர்களின் பணி அத்தியவசியமாக உள்ளது. எனவே இரண்டு பிரதான வைகை குடிநீர் திட்டங்களையும் பராமரிப்பு செய்வதற்கு, திட்டத்தின் தன்மை, முன் அனுபவம் ஆகியவற்றை கருத்தில் கொண்டு மேற்கண்ட பணியாளர்களுக்கு பணி உத்தரவாதம் ஏற்படுத்தி தருவது மிக அவசியமானதாகும். மேற்கண்ட பணியாளர்கள் தொடர்ந்து 10 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரியும் காலங்களில் மதுரை மாநகராட்சியில் பணியாளர்கள் நியமனம் இல்லாத நிலை இருந்தது. இத்திட்டத்தில் பணிபுரிபவர்கள் தேனி, திண்டுக்கல் மற்றும் மதுரை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ளனர். சிலர் பணி மூப்பின் வயது வரம்பு கடந்து விட்டனர். இதனை கருத்தில் கொண்டு மாமன்றம் தினகூலிகளாக நியமனம் செய்ய ஒப்புதல் செய்தது (மாமன்ற தீர்மான எண்: 366 நாள்:17.04.2013). தினகூலிகளை நியமனம் செய்யக்கூடாது என்ற விதியின் படி நியமனம் செய்யப்படவில்லை.

எனவே, மேலே தெரிவிக்கப்பட்டுள்ள விபரங்களின் அடிப்படையில் இத்திட்டத்தின் கீழ் பணியாற்றும் பராமரிப்பு பணியாளர்களின் 10 வருட பணியின் முன் அனுபவம் மற்றும் வைகை அணை முதல் மதுரை வரையுள்ள குழாயின் வழித்தட அனுபவம் மற்றும் குறைந்தபட்ச படிப்பு தகுதி ஆகியவற்றை கருத்தில் கொண்டு, மாநகராட்சியில் உள்ள காலிப் பணியிடத்தில் வைகை குடிநீர் திட்ட களப்பணியாளர்களாக பணி நியமனம் செய்ய அரசுக்கு பிரேரணை அனுப்ப மாமன்ற ஒப்பதலைலக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.709</u>**

**<u>அரசுக்கு பிரேரனை அனுப்ப குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.</u>**

**8) <u>ம.பொ.4/ 18079 / 14</u>**

மதுரை மாநகராட்சி அனைத்து மண்டலங்களிலும் அமைந்துள்ள மாநகராட்சிக்கு சொந்தமான பூங்காக்களை தனியார் நிறுவனங்கள் மூலம் பராமரிப்பு செய்ய திட்டமிடப்பட்டு கீழ்க்கண்ட விபரப்படி பூங்காக்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | மண்டலம் | வார்டு எண் | பூங்காவின் பெயர் | நிறுவனங்களின் பெயர் |
|---|---|---|---|---|
| 1 | 47 | 2 | தரைத்தொட்டி பூங்கா | Madurai Group living Foundation |
| 2 | 19 | 1 | பொன்மேனி ஜெய்நகர் (ஜீவனா ஸ்கூல் பூங்கா எதிரில்) | பொன்மேனி ஜெய்நகர் நலச்சங்கம் மற்றும் ஜீவனா பள்ளி நிர்வாகம் |
| 3 | 93 | 4 | TVS நகர்பூங்கா (TVS Matriculation பள்ளி அருகில்) | Greenland India Trust சுந்தர்ராஜபுரம் |
| 4 | 77 | 4 | TVS பள்ளி எதிரில் உள்ள பூங்கா சுந்தர்ராஜபுரம் | Reliance Foundation |
| 5 | 39 | 2 | சின்னகண்மாய் பூங்கா கோரிப்பாளையம் | |
| 6 | 43 | 2 | ராஜாஜி பூங்கா (பகுதி) | |
| 7 | 33 | 2 | R.C சர்ச் எதிர் பூங்கா அண்ணாநகர் | |
| 8 | 19 | 1 | பெண்கள் மற்றும் சிறுவர் விளையாட்டு திடல் பொன்மேனி ஜெய்நகர் | |
| 9 | 61 | 3 | சிறுவர் விளையாட்டு பூங்கா வில்லாபுரம் புதுநகர் அருப்புக்கோட்டை மெயின் ரோடு | |
| 10 | 22 | 1 | HMS காலனி சிறுவர் விளையாட்டு திடல் மற்றும் பூங்கா HMS காலனி | |

மேற்கண்ட விபரப்படி பூங்காக்களை அதனெதிரே குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு பராமரிப்பு செய்ய உரிய நிபந்தனைகளுடன் அனுமதி வழங்குவது தொடர்பாக மாமன்றத்தின் ஒப்புதலைக்கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.710</u>**

**<u>வரிசை எண் 4 முதல் 10 வரை உரிய நிபந்தனைகளுடன் அனுமதி வழங்குவதற்கு குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.</u>**

**9) <u>ம.பொ. 4/030161/ 2014</u>**

மதுரை மாநகராட்சியில் நாள் ஒன்றுக்கு 700 முதல் 720 மெட்ரிக் டன் குப்பைகள் உற்பத்தியாகின்றது. இக்குப்பைகள் மூன்று சக்கர வண்டிகள் மூலமாக டம்பர் பின் தொட்டியில் சேகரிக்கப்பட்டு அதன் பின் டம்பர் பிளேசர், டிப்பர் லாரி, டிராக்டர் மற்றும் காம்பேக்டர் வாகனங்கள் மூலமாக அவனியாபுரத்தில் உள்ள வெள்ளைக்கல் குப்பை சேகரிப்பு மையத்திற்கு எடுத்துச் செல்லப்படுகின்றது. அவ்வாறு குப்பை மையத்திற்கு எடுத்துச் செல்லப்பட்ட குப்பைகள் மக்கும் மற்றும் மக்காத குப்பைகளாக பிரிக்கப்பட்டு இயற்கை சூழலினை பாதிக்கா வண்ணம் மக்கும் குப்பைகளிலிருந்து உரம் தயாரிக்கப்பட்டு மக்காத குப்பைகள் அனைத்தும் விஞ்ஞான முறையில் கிடங்கில் சேகரிப்பு செய்யப்பட்டு வருகின்றது.

மேற்கண்டவாறு நகர்ப் பகுதிகளில் உள்ள குப்பைகளை சேகரிப்பு செய்வதற்கு ஆண்டு ஒன்றுக்கு கீழ்க்கண்டவாறு செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதன் விபரம் பின்வருமாறு:

| வ. எண். | விபரம் | உத்தேசமாக ஆண்டு ஒன்றுக்கு செலவினத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | துப்புரவுப் பணியாளர்கள் மற்றும் துப்புரவு மேற்பார்வையாளர்களின் ஊதியம் | 3010.00 |
| 2. | டீசல் செலவினம் | 702.00 |

| வ. எண். | விபரம் | உத்தேசமாக ஆண்டு ஒன்றுக்கு செலவினத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 3. | வாகனங்கள் பராமரிப்பு செலவினம் | 250.00 |
| 4. | வெள்ளைக்கல் குப்பை சேகரிப்பு மைய மாதந்திர பராமரிப்பு செலவினம் | 600.00 |
| | **மொத்தம்** | **4562.00** |

மேற்கண்டவாறு ஆண்டு ஒன்றுக்கு திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் மேற்கொள்வதற்கு ரூ. **4562.00** இலட்சம் செலவினம் செய்யப்படுவதால் மாநகராட்சிக்கு நிதிச்சுமை ஏற்படுகின்றது. மேலும் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு அதிக செலவினம் செய்யப்படுவதால் சாலை, குடிநீர், பாதாள சாக்கடை மற்றும் இதர அத்தியவசியப் பணிகளை மேற்கொள்வதில் பல்வேறு நிதிப் பற்றாக்குறை ஏற்படுகின்றது. எனவே இதனைக் கருத்தில் கொண்டும் மேலும் சுகாதாரத்தை உயர்ந்த நிலையில் பேனவும் வணிக வளாகங்கள், தங்கும் விடுதிகள், உணவகங்கள், மருத்துவமனைகள், திரையரங்குகள், திருமண மண்டபகங்கள் மற்றும் இதர தனியார் வணிக மையங்கள் போன்றவற்றிற்கு சேவை வரி நிர்ணயம் செய்வது அவசியமாகிறது. மத்திய அரசின் நகர்ப்புர மேம்பாட்டு அமைச்சகத்தின் மூலம் வெளியிடப்பட்டுள்ள திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2000 என்ற வழிகாட்டு கையேட்டில் பிரிவு 21ல் உள்ளாட்சி அமைப்புகள் நவீனமயமாக்கப்பட்ட திடக்கழிவு மேலாண்மைக்கு அதிக நிதி செலவு செய்ய வேண்டிய நிலை இருப்பதால் உள்ளாட்சி அமைப்புகள் திடக்கழிவு மேலாண்மைப் பணிகளுக்கென சேவை வரி பெற்று திடக்கழிவு மேலாண்மைப் பணிகளை செய்யலாம் என கூறியுள்ளது.

கீழ்க்கண்ட அட்டவணையில் உள்ள இனங்களின் அடிப்படையில் சேவை வரி நிர்ணயம் செய்யப்படுகிறது.

| வ. எண். | இனம் | சேவை வரி (நாள் ஒன்றுக்கு) |
|---|---|---|
| **1.** | **உணவு விடுதி மற்றும் உணவகங்கள்** | |
| அ | வகுப்பு A (நட்சத்திர வகுப்பு) | 500 |
| ஆ | வகுப்பு B (21 மேஜைகளுக்கு மேல்) | 200 |
| இ | வகுப்பு C (11 முதல் 20 மேஜைகள் வரை) | 100 |
| ஈ | வகுப்பு D (10 மேஜைகள் வரை) | 50 |
| **2.** | **திருமண மஉறால்** | |
| அ | வகுப்பு A (5000 சதுரடிக்கு மேல்) | 100 |
| ஆ | வகுப்பு B (4001 முதல் 5000 சதுரடி வரை) | 75 |
| இ | வகுப்பு C (3001 முதல் 4000 சதுரடி வரை) | 55 |
| ஈ | வகுப்பு D (2001 முதல் 3000 சதுரடி வரை) | 45 |
| ஊ | வகுப்பு E (2000 சதுரடிக்குள்) | 25 |
| **3.** | **மருத்துவமனைகள்** | |
| அ | வகுப்பு A (50 படுக்கைகளுக்கு மேல்) | 500 |
| ஆ | வகுப்பு B (21 முதல் 50 படுக்கைகள் வரை) | 200 |
| இ | வகுப்பு C (11 முதல் 20 படுக்கைகள் வரை) | 100 |
| ஈ | வகுப்பு D (10 படுக்கைகள் வரை) | 50 |
| **4.** | **தங்கும் விடுதிகள்** | |
| அ | வகுப்பு A (நட்சத்திர வகுப்பு) | 500 |
| ஆ | வகுப்பு B (50 அறைகளுக்கு மேல்) | 300 |
| இ | வகுப்பு C (21 முதல் 50 அறைகள் வரை) | 200 |
| ஈ | வகுப்பு D (11 முதல் 20 அறைகள் வரை) | 100 |
| உ | வகுப்பு E (10 அறைகள் வரை) | 50 |
| **5.** | **திரையரங்குகள்** | 500 |

| வ. எண். | இனம் | சேவை வரி (நாள் ஒன்றுக்கு) |
|---|---|---|
| 6. | தொழில் மற்றும் அலுவலக வளாகங்கள் | 150 |
| 7 | சிறு தொழில் நிறுவனங்கள் | 75 |
| 8. | பிற சிறு நிறுவனங்கள் | 50 |
| 9. | சந்தை வளாகங்கள் (Market, Show Room & Shopping Mall) | |
| அ | வகுப்பு A (2000 சதுரடிக்கு மேல்) | 500 |
| ஆ | வகுப்பு B (1001 முதல் 2000 சதுரடி வரை) | 300 |
| இ | வகுப்பு C (501 முதல் 1000 சதுரடி வரை) | 200 |
| ஈ | வகுப்பு D (250 முதல் 500 சதுரடி வரை) | 100 |
| ஊ | வகுப்பு E (250 சதுரடிக்குள்) | 50 |

மேற்கண்டவாறு திடக்கழிவு மேலாண்மை சேவை வரி வசூல் செய்வதன் மூலம் கிடைக்கப் பெறும் வருவாயிலிருந்து திடக்கழிவு மேலாண்மைப் பணிக்கு ஏற்படும் செலவினங்களை ஈடு செய்ய இயலும் என்பதனை கருத்தில் கொண்டு மேற்கண்ட சேவை வரியினை நிர்ணயம் செய்து ஆறு மாதங்களுக்கு ஒரு முறை பெறுவதற்கு மாமன்றத்தின் ஒப்பதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.711**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## 10) ம.பொ. 4/40328 / 2013

மதுரை மாநகராட்சியில் தற்போது கட்டிட வரைபட அனுமதி தனியாக விண்ணப்பித்து பெற்றுக் கொள்ளும் நடைமுறை உள்ளது. கட்டிட வரைபட அனுமதி பெறுபவர்கள் பாதாள சாக்கடை இணைப்பை பெறுவதற்கு மீண்டும் விண்ணப்பிக்க வேண்டிய நிலை உள்ளது. இதனால் பொதுமக்களுக்கு உரிய காலத்தில் பாதாள சாக்கடை இணைப்பு பெறுவதில் கால தாமதம் ஏற்படுகின்றது. இதனை கருத்தில் கொண்டு இனி வரும் காலங்களில் புதிதாக கட்டிட வரைபட அனுமதி வழங்கும் போது பாதாள சாக்கடை இணைப்பு அனுமதியும் சேர்த்து வழங்கவும்,

தற்போது மாநகராட்சியின் பழைய வார்டுப் பகுதிகளில் 1,75,020 சொத்து வரி விதிப்புகள் உள்ளது. அதே நேரத்தில் பாதாள சாக்கடை இணைப்பிற்கான வரி விதிப்பு 1,06,254 எண்ணிக்கை மட்டுமே உள்ளது. பழைய மாநகராட்சியின் 72 வார்டுகளிலும் பாதாள சாக்கடை அமைப்புகள் முழுமையாக இருக்கின்ற காரணத்தினால் மேற்கண்ட 72 வார்டுகளிலும் கட்டிட வரைபட அனுமதிக்கான விண்ணப்பத்தினை பெறும் போது பாதாள சாக்கடை இணைப்பிற்குண்டான விண்ணப்பத்தினை பெற்று கட்டிட வரைபட அனுமதி வழங்கும் பொழுதே பாதாள சாக்கடை இணைப்பிற்குண்டான அனுமதியும் சேர்த்து வழங்குவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.712**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## 11) ம.பொ.1/21097/2012

மதுரை மாநகராட்சிக்கு சொந்தமான வாகன பராமரிப்பு நிலையத்தில் 300க்கும் மேற்பட்ட வாகனங்கள் பராமரிக்கப்பட்டு வரும் நிலையில் கொள்முதல் செய்த நாளிலிருந்து 10 ஆண்டுகளுக்கு மேலாக பயன்படுத்தப்பட்டு வரும் வாகனங்களுக்கு பராமரிப்பு செலவு மிகவும் அதிகமாக உள்ளதால் 1978ஆம் ஆண்டு வாங்கப்பட்ட வாகனங்கள் மற்றும் அதன் பிறகு 1994ம் ஆண்டு வரை வாங்கி பயன்படுத்தப்பட்ட வாகனங்களை கழித்தல் செய்ய (சுமார் 23 வாகனங்கள்) அரசு பணிமனையான Government Workshop Motor Vechicle Inspector அவர்களிடமிருந்து மதிப்பீடு பெறப்பட்டு கழித்தல் செய்வதற்கு கடந்த 30.08.2012 அன்று நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் (மாமன்றத் தீர்மானம் எண்.237) ஒப்புதல் பெறப்பட்டது.

மேற்கண்ட ஒப்புதலின் அடிப்படையில் 20 வாகனங்களுக்கு அரசு பணிமனை நிர்ணயித்த தொகையான ரூ.14,06,000/-க்கு மாநகராட்சி மூலம் கடந்த 26.08.2014 அன்று மாநகராட்சி மைய வாகன பராமரிப்பு நிலையத்தில் பொது ஏலம் நடத்தப்பட்டது. அதில் அதிகபட்ச ஏலத் தொகையாக ரூ.14,30.550/-க்கு திரு.T.குழந்தைவேல், மதுரை என்பவர் ஏலம் கேட்டுள்ளதை உறுதி

செய்து உரிய தொகையினை மாநகராட்சிக் கருவூலத்தில் செலுத்தி அன்னார் ஏலப் பொருட்களை எடுத்துச் செல்ல ஆணையாளர் அவர்களிடம் அனுமதி உத்தரவு பெறப்பட்டுள்ளது என்ற தகவலை மாமன்றத்திற்கு பொருளாக வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.713**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**12) JnS5/36172/2007**

மதுரை மாநகராட்சி ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு (JnNURM) திட்டப் பணிகளுக்கு மத்திய, மாநில அரசுகள் மற்றும் மாநகராட்சி பங்களிப்பு உடன் பணிகள் நடைபெற்று இரண்டாம் வைகை குடிநீர் திட்டம், வைகை ஆற்றின் குறுக்கே தடுப்பணைகள் கட்டுதல் மற்றும் திடக்கழிவு மேலாண்மை ஆகிய திட்டங்கள் முடிவுபெற்று பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மழைநீர் வடிகால் திட்டம் மற்றும் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் நடைபெற்று வருகிறது. இதில் வைகை ஆற்றின் குறுக்கே தடுப்பணைகள் கட்டுதல் திட்டம் தவிர மீதம் உள்ள நான்கு திட்டங்களில் விடுபட்ட ஒத்த இன பணிகளை மக்கள் நலன் கருதி அவசர அவசியத்தைக் கருதியும் பணிகள் செய்து முடிக்கப்பட்டு ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு (JnNURM) திட்டத்தில் கீழ்கண்ட அட்டவணைப்படி தொகை வழங்கப்பட்டுள்ளது.

**(ரூ.கோடியில்)**

| வ. எண் | திட்டத்தின் பெயர் | ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ. | செலவிடப்பட்ட தொகை ரூ. | ஒத்த இன பணிகளுக்காக JnNURM திட்டத்தில் செலவிடப்பட்ட தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1. | இரண்டாம் வைகை குடிநீர் திட்டம் | 71.23 | 82.51 | 11.28 |
| 2. | திடக்கழிவு மேலாண்மை | 75.99 | 77.40 | 1.41 |
| 3. | மழைநீர் வடிகால் | 348.31 | 347.86 | 12.58 |
| 4. | பாதாள சாக்கடை திட்டம் | 252.10 | 170.72 | 7.75 |
| | **மொத்தம்** | **747.63** | **678.49** | **33.02** |

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ளபடி விடுபட்ட ஒத்த இன பணிகளை செய்து முடித்ததற்குரிய தொகை ரூ.33.02 கோடியை ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு (JnNURM) திட்டத்தில் செலவு செய்தமைக்கு ஒப்புதலும், செலவு செய்ததை பொதுநிதியிலிருந்து பெற்று ஈடு செய்துக் கொள்ளவும், பொதுநிதியிலிருந்து JnNURM திட்டத்திற்கு தொகை வழங்க இயலாத நிலையில் தமிழ்நாடு உட்கட்டமைப்பு நிதி நிறுவனம் மூலம் கடனாகவோ அல்லது மானியமாகவோ பெற்று ஈடு செய்துகொள்ள உரிய பிரேரணை அரசிற்கு அனுப்பி வைக்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.714**

**அரசுக்கு உரிய பிரேரனை அனுப்ப குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**13) மநூ2/9156/2007**

மதுரை மாநகராட்சி மைய பொது சுகாதாரப்பிரிவில் உள்ள துப்புரவு பணியாளர்கள் காலி பணியிடங்களுக்கு ஏற்ப திருவிழா காலங்களில் நியமனம் செய்யப்படும் நிபந்தனைகளின் அடிப்படையில் துப்புரவு பணியாளர்கள் நியமனம் செய்ய மாமன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டு (மாமன்ற தீர்மானம் எண். 1054 நாள் : 28.02.2011 துப்புரவு பணியாளர்கள் 621 நபர்கள் கொசு ஒழிப்பு பணியாளர்கள் 60 நபர்கள் சேர்த்து மொத்தம் 681 நபர்கள் கோப்பு எண். மநூ2/9156/2007) நான்கு மண்டலங்களிலும் துப்புரவுப் பணியாளர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நிர்ணயம் செய்யும் தினக்கூலி அடிப்படையில் பணியாற்றி வருகிறார்கள்.

மேற்படி பணியாளர்கள் 2007 முதல் மாநகராட்சியில் தினக்கூலி அடிப்படையில் துப்புரவு பணியில் பணியாற்றி வருவதாலும், தற்பொழுது அதிகமான நிரந்தர துப்புரவு பணியாளர்கள் பணியிடம் காலியாக இருப்பதாலும் அன்னார்களை அரசாணை எண். 385 நகராட்சிகள் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள் : 01.10.2010ன்படி காலமுறை சம்பளம் நிர்ணயம் செய்யவும், மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தில் இருந்து முன்னுரிமை பட்டியல் பெற்று நிரப்புவதில் இருந்து விதிவிலக்கு அளித்தும் அரசின் பின்னேற்பு பெற்று கால முறை சம்பளம் வழங்கவும், உரிய பிரேரணை அரசுக்கு பரிந்துரை செய்ய மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.715**

**உரிய பிரேரனை அரசுக்கு பரிந்துரை செய்ய குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**14) மநு6/010688/2013**

மதுரை மாநகராட்சியில் இயங்கும் மலிவு விலை உணவகங்களில் 10 உணவகங்களுக்கு ஏற்படும் எதிர்பாராத செலவுகளை ஈடு செய்வதற்கு, முன்பணம் ரூ.3,000/- (ரூபாய் மூவாயிரம் மட்டும்) அனுமதிக்கப்பட்டு சுகாதார ஆய்வாளர்களுக்கு வழங்க மாமன்றம் ஒப்புதல் (மாமன்ற தீர்மானம் எண். 414 நாள் : 26.06.2013) பெறப்பட்டுள்ளது. மேற்படி முன்பணத்தை நிர்வாக நலன் கருதி மலிவு விலை உணவகங்களின் பொறுப்பு வகிக்கும் சமுதாய அமைப்பாளர்களுக்கு வழங்கப்பட்டதை மாமன்றத்தின் தகவலுக்கு தெரிவிப்பதுடன், 11 வது மலிவு விலை உணவகமான அரசு இராஜாஜி மருத்துவமனை, மலிவு விலை உணவகத்திற்கு சம்பந்தப்பட்ட மலிவு விலை உணவகத்தின் பொறுப்பு வகிக்கும் சமுதாய அமைப்பாளருக்கு ரூ.3,000/- (ரூபாய் மூவாயிரம் மட்டும்) முன்பணம் வழங்க மாமன்றத்தின் அனுமதி கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.716**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**15) மவ3/029992/14**

மதுரை மாநகராட்சி மண்டலம்–4க்குட்பட்ட வார்டு – 78ல் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான பழைய லாரி நிலையத்தில் தரை வாடகை அடிப்படையில் 156 கடைகள் உரிமம் வழங்கப்பட்டுள்ளது. தற்போது மேற்படி கடைகள் உரிமம் வழங்கப்பட்ட பரப்பளவை விட அதிகமான அளவில் இடத்தினை ஆக்கிரமிப்பு செய்து உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது.

மாநகராட்சியின் வருவாயினை கருத்தில் கொண்டும், மேற்படி கடைகளின் அளவுகளை ஒழுங்குப்படுத்தும் நோக்கத்துடன் அனுமதிக்கப்பட்ட அளவை விட அதிகமாக உபயோகப்படுத்தப்பட்டு வரும் இடத்திற்கு தற்போதைய பொது பணித்துறை மதிப்பின்படி வாடகை நிர்ணயம் செய்து பழைய வாடகையுடன் சேர்த்து மாத நிர்ணயம் செய்ய மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.717**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**16) மவ3/039925/13**

மதுரை மாநகராட்சி மண்டலம் 1 முதல் 4 வரை உள்ள கீழ்கண்ட பட்டியலில் கண்டுள்ள வருவாய் தரும் இனங்கள் சந்தைகள், வாகனம் நிறுத்துமிடங்கள், கட்டண கழிப்பிடங்களுக்கு 2014-2015ம் ஆண்டுக்கு கட்டணம் வசூல் உரிமம் வழங்க பொது ஏலம்/டெண்டர் நடத்தப்பட்டது. ஏலம் போகாததால் 14.08.2014 மற்றும் 21.08.2014 ம் தேதிகளில் மறு ஏலம் நடத்த அறிவிப்பு செய்யப்பட்டது.

மூன்று முறை ஏல அறிவிப்புகள் செய்யப்பட்டும் ஏலம் போகாததால் மேற்படி இனங்கள் துறை ரீதியான வசூல் செய்யப்பட்டு வருகிறது. துறை ரீதியாக வசூல் செய்ய போதிய பணியாளர்கள் இல்லாததாலும் மற்றும் கட்டண ரசீது அச்சடிக்கும் செலவீனங்களை தவிர்க்கும் பொருட்டும், மாநகராட்சி வருவாயினை கருத்தில் கொண்டும் ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்ட 2014-15ம் ஆண்டுக்கான குத்தகை மதிப்பினை துறை ரீதியான வசூல் தொகையுடன் ஒப்பிட்டு ஒவ்வொரு இனத்திற்கும் கீழ்கண்டவாறு ஏல மதிப்பு மறு நிர்ணயம் செய்து மறு ஏலத்திற்கு அறிவிப்பு செய்ய மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

2014-2015 ம் ஆண்டுக்கு ஏலம் போகாத இனங்களின் விபரப்பட்டியல்

| வ. எண் | இனத்தின் பெயர் | 2014-15ம் ஆண்டு ஒருவருட குத்தகை மதிப்பு | 2014-2015ம் ஆண்டிற்கு மறு நிர்ணயம் செய்யும் ஒரு வருட குத்தகை மதிப்பு |
|---|---|---|---|
| 1 | வெள்ளைக்கண்ணு தியேட்டர் அருகில் தினசரி மார்க்கெட் | 111690 | 111690 |
| 2 | புதுஜெயில் ரோடு நவீன கட்டண கழிப்பறை | 169785 | 169785 |
| 3 | ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் 10 இடங்களில் தொலைக்காட்சி பெட்டி வைத்து விளம்பரம் செய்யும் உரிமம் | 347801 | 330411 |
| 4 | மாநகராட்சி அலுவலக வளாகம் மற்றும் ஈகோ பார்க் சுற்றி வாகன நிறுத்தம் உரிமையாளரிடம் வசூல் செய்யும் உரிமம் | 389296 | 369831 |
| 5 | ஈகோ பார்க படகுதுறை | 124000 | மராமத்து |
| 6 | பழைய ராம்நாட் கலெக்டர் ஆபிஸ் அருகில் உள்ள கழிப்பிடம் | 382492 | 305994 |
| 7 | புதூர் காய்கறி மார்க்கெட் | 2483712 | 1986970 |
| 8 | அகிம்ஷாபுரம் செல்லூர் மார்க்கெட் | 354816 | 244686 |

| | | | |
|---|---|---|---|
| 9 | புதூர் டிவிசன் ஆபிஸ் அலுவலகம் அருகில் உள்ள கட்டண கழிப்பறை | 271873 | மராமத்து |
| 10 | தல்லாக்குளம் பம்பிங் ஸ்டேசன் கட்டண கழிப்பறை | 299604 | 269644 |
| 11 | ஜம்புரோபுரம் தினசரி மார்க்கெட் வசூல் உரிமம் | 315000 | 299250 |
| 12 | இரத்தின சாமி நாடார் ரோடு வாகன காப்பகம் | 151200 | 151200 |
| 13 | புதுமகாளிப்பட்டி தினசரி மார்க்கெட் | 176904 | 159214 |
| 14 | அவனியாபுரம் சௌராஷ்ட்ராபுரம் 1வது தெரு சோனையாபிள்ளை தெரு முத்தையா பிள்ளை தெரு சந்திப்பு சாலையோர சந்தை தினசரி வசூல் செய்யும் உரிமம் | 154114 | 138703 |
| 15 | நெல்பேட்டை ஆட்டுமந்தை பொட்டல் ஆடு அறுவை செய்யும் கூடம் வசூல் செய்யும் உரிமம் | 2400000 | 1920000 |
| 16 | அனுப்பானடி நவீன ஆடுவதை செய்யும் கூடம் வசூல் செய்யும் உரிமம் | 200000 | 160000 |
| 17 | பழைய இங்கிலீஷ் கிளப் சந்து தினசரி மார்க்கெட் காய்கறி கடைகள் | 201758 | 191670 |
| 18 | கிருஷ்ணாபுரம் குறுக்குத்தெரு காய்கறி மார்க்கெட் (தற்போது மாற்றப்பட்டுள்ள இடம் பழைய குயவர் பாளையம் ரோடு அனுப்பானடி வாய்க்கால் மேல் உள்ள தினசரி காய்கறி மார்க்கெட்) | 116865 | 111022 |
| 19 | கீழமாரட் வீதி தினசரி மார்க்கெட் | 1367246 | மாவட்ட நீதிமன்ற வழக்கு OS No: 272 of 2013 |
| 20 | தாசில்தார் பள்ளிவாசல் கழிப்பறை | 396313 | 317050 |
| 21 | பழைய தெற்கு மண்டலம் பின்புறம் உள்ள ஆண் பெண் கட்டண கழிப்பறை | 793065 | 634452 |
| 22 | திருப்பரங்குன்றம் திருமண மண்டபம் முன் பந்தல் அமைத்துக்கொள்ளும் விஷேச உரிமையார்களிடம் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 62108 | 49686 |
| 23 | பைக்கராவில் புதன்கிழமை தோறும் நடைபெறும் வாரச்சந்தை | 196875 | 157500 |
| 24 | பாரதியார் நவீன சிறப்பங்காடி வடபுறம் உள்ள சைக்கிள் ஸ்டாண்டில் நிற்கும் இரண்டு சக்கர வாகனங்கள் மற்றும் பெரியார் பேருந்து நிலையத்தில் நிற்கும் இரண்டு சக்கர வாகனம் கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமம் | 1125000 | 1012500 |
| 25 | அவனியாபுரம் புல் பிளாட் எண் 1, 2, 3, 4 மற்றும் 6 (JnNURM திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்த பிளாட் போக மீதியுள்ள பிளாட்) | 3230561 | 2584449 |
| 26 | நேதாஜி ரோடு நேதாஜி சிலை அருகில் கழிப்பிடம் | 279653 | 251688 |
| 27 | மேலவெளி வீதி இருசக்கர வாகன காப்பகம் | 168525 | 151673 |
| 28 | ஜெய்ஹிந்த்புரம் தினசரி மார்க்கெட் | 1079925 | 971933 |
| 29 | திருப்பரங்குன்றம் கோயில் அருகில் உள்ள இரு சக்கர வாகன காப்பகம் | 298725 | 224044 |
| 30 | திருப்பரங்குன்றம் தினசரி மார்கெட் | 1080947 | 864758 |
| 31 | திருப்பரங்குன்றம் விசேஷ காலங்களில் சாலை ஓர கடைகள் வசூல் | 278250 | 222600 |
| 32 | திருப்பரங்குன்றம் தினசரி மார்கெட் அருகில் வாகன காப்பகம் | 108150 | 97335 |
| 33 | பெரியார் பேருந்து நிலையம் புதிதாக கட்டப்பட்டுள்ள நவீன கட்டண கழிப்பறை | 952115 | 856904 |
| 34 | அமெரிக்கன் மிஷன் சர்ச் சந்து கட்டண கழிப்பிடம் | 233968 | 210571 |
| 35 | வார்டு எண்:94 அவனியாபுரம் கண்மாய் பகுதியில் ஞாயிறு தோறும் நடைபெறும் வாரச்சந்தை | 40500 | 32400 |
| 36 | மேல வெளி வீதி கழிப்பிடம் | 115763 | 104187 |

| | | | |
|---|---|---|---|
| 37 | சுற்றுலா வாகனம் வசூல் உரிமம் பழைய சென்ட்ரல் மார்க்கெட் வளாகம் | 4210500 | 3789450 |

**மாமன்றத்தீர்மானம் எண்.718**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**17) ந.க.எண்.A7/021337/13**

மதுரை மாநகராட்சி கல்விப்பிரிவில் கணினி இய்குபவராக பணிபுரியும் திருமதி.M.S.மணிமேகலை என்பவருக்கு மதுரை மாநகராட்சி மாமன்ற தீர்மானம் எண்.449 நாள் : 27.06.2013-ன்படி தொகுப்பூதியமாக மாதம் ரூ.10,000/- மாநகராட்சி கல்விநிதியிலிருந்து 2.9.2013 முதல் வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி பணியாளரின் பணியின் அவசியத்தைக் கருதி தொடர்ந்து அதே தொகுப்பூதியத்தில் 1.9.2014 முதல் மேலும் ஓராண்டுக்கு வழங்குவதற்கு மாமன்ற ஒப்புதல் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.719**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**18) மச1/004185/2014**

சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை, மதுரை மாவட்ட நீதிமன்றங்கள் மற்றும் தொழிலாளர் சார்ந்த அனைத்து நீதிமன்றங்களுக்கும் மதுரை மாநகராட்சி சார்பாக நியமனம் செய்யப்படும் நிலை வழக்கறிஞர்களுக்கு வழங்கப்பட வேண்டிய வழக்குரைஞர் தொடர் கட்டணம் (Retainer Fees), வழக்கு மற்றும் இதர கட்டண விகிதங்கள் (Legal and Other Fees) குறித்து வெளியிடப்பட்டுள்ள 1.).G.O.Ms.No.1033 PUBLIC (LAW OFFICERS) Department Dated : 01.11.2010 மற்றும் 2.) G.O.Ms.No.36 Home (Courts – VI A) Department Dated : 12.01.2011 அரசாணைகள் மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.720**

**பதிவு செய்யப்பட்டது.**

**19) H4/011684/14**

மதுரை மாநகராட்சி பொது சுகாதாரப்பிரிவின் கீழ் இயங்கி வரும் மருந்தகங்கள் மற்றும் மகப்பேறுமனைகளில் பணிபுரியும் பணியாளர்களின் எண்ணிக்கை மிகக் குறைந்த அளவில் இருப்பதால் கீழ் வரும் மருந்தகங்கள் மகப்பேறுமனையுடன் இணைப்பது சம்பந்தமாக மாமன்றத்தின் ஒப்புதலைக்கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**I.பழங்காநத்தம் மருந்தகம்:**

| பதவி | ஒதுக்கீடு செய்யப்பட்ட பணியாளர் | தற்போது பணிபுரியும் பணியாளர் | மருந்தகத்துடன் இணைக்கப்படும் மகப்பேறுமனையின் பெயர் |
|---|---|---|---|
| மருத்துவ அலுவலர் | 1 | – | பழங்காநத்தம் மகப்பேறுமனை |
| மருந்தாளுநர் | 1 | 1 | |
| ஆண் செவிலிப் பணியாளர் | 1 | – | |
| பெண் செவிலிப் பணியாளர் | 1 | – | |
| கூட்டுபவர் மற்றும் தண்ணீர் எடுப்பவர் | 1 | – | |
| மொத்தம் | 5 | 1 | |

**II.கீழ் மதுரை மருந்தகம்:**

| பதவி | ஒதுக்கீடு செய்யப்பட்ட பணியாளர் | தற்போது பணிபுரியும் பணியாளர் | மருந்தகத்துடன் இணைக்கப்படும் மகப்பேறுமனையின் பெயர் |
|---|---|---|---|
| மருத்துவ அலுவலர் | 1 | 1 | கென்னடி மகப்பேறுமனை |
| மருந்தாளுநர் | 1 | 1 | |
| ஆண் செவிலிப் பணியாளர் | 1 | – | |

| | | | |
|---|---|---|---|
| பெண் செவிலிப் பணியாளர் | 1 | – | |
| கூட்டுபவர் மற்றும் தண்ணீர் எடுப்பவர் | 1 | – | |
| மொத்தம் | 5 | 2 | |

**III.பொன்னகரம் மருந்தகம்:**

| பதவி | ஒதுக்கீடு செய்யப்பட்ட பணியாளர் | தற்போது பணிபுரியும் பணியாளர் | மருந்தகத்துடன் இணைக்கப்படும் மகப்பேறுமனையின் பெயர் |
|---|---|---|---|
| மருத்துவ அலுவலர் | 1 | – | லேடி வில்லிங்டன் மகப்பேறுமனை |
| மருந்தாளுநர் | 1 | – | |
| ஆண் செவிலிப் பணியாளர் | 1 | 1 | |
| பெண் செவிலிப் பணியாளர் | 1 | – | |
| கூட்டுபவர் மற்றும் தண்ணீர் எடுப்பவர் | 1 | – | |
| காவலர் | 1 | 1 | |
| மொத்தம் | 6 | 2 | |

**மாமன்றத்தீர்மானம் எண்.721**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**20)** **மநு2/ 029995/14**

மதுரை மாநகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதிகளில் கழிவு நீர் அகற்றும் தனியார் வாகனங்களின் செயல்பாட்டினை ஒழுங்குப்படுத்துதல், கழிவு நீர்த் தொட்டிகளில் பணியாளர்கள் இறங்குதலை தடைசெய்திடும் அவசியத்தை கருதி 02.09.2014 அன்று நடைபெற்ற கலந்தாய்வு கூட்டத்தில் மதுரை மாநகராட்சி செயற்பொறியாளர்கள், உதவி செயற்பொறியாளர்கள், மண்டல சுகாதார ஆய்வாளர்கள் மற்றும் கழிவு நீர் ஊர்தி உரிமயாளர்கள் அவர்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட கூட்டத்தில் கழிவு நீர் ஊர்திகள் பதிவு செய்தல், பதிவு கட்டணம் நிர்ணயம் செய்தல், அனுமதி அட்டை வழங்குதல், விதிமுறைகள் வகுத்தல், மேற்படி தனியார் வாகனங்கள் கழிவு நீரை திறந்த வெளியில் கொட்டுவதால் சுகாதார சீர்கெடு ஏற்படுவதை தடுக்கவும்,சேகரிக்கும் கழிவு நீரை மாநகராட்சி கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் வெளியேற்றவும்,விதியினை மீறுபவர்கள் மீது எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை குறித்து வரையறுக்கப்பட்டுள்ளது.

**மண்டலம் - 1**

| **வ.எண்** | **வார்டு** | **கழிவு நீரேற்று நிலையம் அமைந்துள்ள இடம்** |
|---|---|---|
| 1 | 19 | பொன்மேனி |
| 2 | 9 | களத்துப்பொட்டல் |
| 3 | 8 | தத்தனேரி |

**மண்டலம் - 2**

| **வ.எண்** | **வார்டு** | **கழிவு நீரேற்று நிலையம் அமைந்துள்ள இடம்** |
|---|---|---|
| 1 | 37 | செல்லூர் பாலம் அருகில் |
| 2 | 33 | அண்ணாநகர் முந்திரி தோப்பு |
| 3 | 27 | கற்பக நகர் (சிப்கோ) |

**மண்டலம் - 3**

| **வ.எண்** | **வார்டு** | **கழிவு நீரேற்று நிலையம் அமைந்துள்ள இடம்** |
|---|---|---|

| | | |
|---|---|---|
| 1 | 52 | சந்தைபேட்டை |
| 2 | 57 | அனுப்பானடி |
| 3 | 58 | சின்ன அனுப்பானடி தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் |
| 4 | 64 | கீரைத்துறை |
| 5 | 62 | வில்லாபுரம் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் |

**மண்டலம் - 4**

| **வ.எண்** | **வார்டு** | **கழிவு நீரேற்று நிலையம் அமைந்துள்ள இடம்** |
|---|---|---|
| 1 | 93 | முத்துப்பட்டி |
| 2 | 76 | பழங்காநத்தம் |

மேற்கண்ட இடங்களில் மட்டுமே கழிவு நீர் அகற்றப்பட வேண்டும். மாநகராட்சியால் பதிவு செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்ட கழிவு நீர் ஊர்தி 1க்கு 6மாதம் ரூ. 5000/- விதிக்கலாம். விதிமுறைகள் கடைபிடிக்காத பதிவு செய்யப்படாத வாகன உரிமைதாரர்களுக்கு கீழ்க்கண்டவாறு அபராத கட்டணம் வசூல் செய்யலாம்.

முதல் முறை ரூ. 2000/-

இரண்டாவது முறை ரூ. 3000/-

மூன்றாவது முறை ரூ. 5000/- மற்றும் பதிவு உரிமம் ரத்து செய்வதோடு வாகனம் பறிமுதல் செய்யப்படும்.

மேற்கண்டவாறு தனியார் செப்டிக் டேங்க் கழிவு நீர் அகற்றும் வாகன உரிமைதாரர்களுக்கு கட்டணம் மற்றும் அபராதம் விதிப்பது மற்றும் செயல்முறைபடுத்த மாமன்ற ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

<u>**மாமன்றத்தீர்மானம் எண்.722**</u>

<u>**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**</u>

**(ஒம்...) வி.வி.ராஜன் செல்லப்பா,**
**மேயர்**
**மதுரை மாநகராட்சி**

**மதுரை**
**நாள் : 25.09.2014**

# மதுரை மாநகராட்சி

## மாமன்றக் கூட்டம்

## Table Agenda - நாள் : 25.09.2014

21) **மபொ.4/30194/2014**

மதுரை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் சாலைகளின் மொத்த நீளம் 1572.53 கி.மீ ஆகும். இச்சாலைகள் அனைத்தும் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை மறு சாலை அமைக்கப்பட்டு வருகின்றது. அவ்வாறு ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை சாலை புனரமைப்பு செய்யப்படும் போது அவ்வப்போது ஏற்படும் ஆங்காங்கே சாலை நொடிகள் ஏற்பட்டு பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் இடையூறாக உள்ளது. இதனை கருத்தில் கொண்டு மாநகராட்சி சார்பாக சாலை நொடிகளை சரிசெய்ய மத்திய தார் கலவை மையம் அமைத்து தார் கலவை இயந்திரம் ஒன்று எண்ணம், மினி டிப்பர் லாரிகள் ஐந்து எண்ணம் மற்றும் ரோலர் ஐந்து எண்ணம் கொள்முதல் செய்தும் தேவைப்படின் பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தியும் சாலை நொடிகளை உடனுக்குடன் சரிசெய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்டவாறு தார் கலவை இயந்திரம், மினி டிப்பர் லாரிகள் மற்றும் ரோலர்கள் வாங்குவதற்கு உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.2.50கோடி ஆகும். எனவே மேற்கண்ட உபகரணங்களை கொள்முதல் செய்யவும் மேற்கண்ட மதிப்பீட்டுத் தொகையினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.723**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**22) மவ4/028272/14**

மதுரை மாநகராட்சி மண்டலம் -2ல் உள்ள மாட்டுத்தாவணி ஒருங்கிணைந்த பேருந்து நிலையத்தில் இயங்கி வரும் கழிப்பிடங்கள் அனைத்தும் மாமன்ற தீர்மானம் எண்: 336 நாள்: 27.02.2013ன்படி இலவச உபயோகமாக செயல்பட்டு வருகிறது. இதனை பராமரிக்க தற்போது மாநகராட்சிக்கு வருடத்திற்கு ரூபாய் 95 இலட்சம் செலவாகிறது. எனவே அதிகமான செலவினங்களை தவிர்க்கவும், மேலும் பராமரிப்பு பணிகளை மேம்படுத்தும் நோக்கத்துடனும் மேற்படி கழிப்பிடங்களை மகளிர் சுய உதவிக்குழுக்கள் மூலமாக பராமரிக்க மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.724**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**23) மவ3/036878/13**

மதுரை மாநகராட்சி மண்டலம் -2ல் உள்ள மாட்டுத்தாவணி ஒருங்கிணைந்த பேருந்து நிலையத்தின் அருகில் அமைக்கப்பட்டுள்ள ஆம்னி பேருந்து நிலையத்தில் மாமன்ற தீர்மானம் எண்:551 நாள்:21.11.13 மற்றும் மாமன்ற தீர்மானம் எண்:593 நாள்:20.02.14ன்படி 48 அலுவலகங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டது. தற்போது புதிதாக கட்டப்பட்டுள்ள 18 அலுவலகங்கள் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் வழி காட்டுதல் அடிப்படையில் ஏற்கனவே உள்ள பட்டியல்படி ஒதுக்கீடு செய்ய மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.725**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**24) மவ3/025666/14**

மதுரை மாநகராட்சி எல்லைக்குள் உள்ள 100 வார்டுகளில் மகளிர் சுய உதவி குழுக்கள் மூலமாக பராமரிக்கப்பட்டு வரும் கழிப்பிடங்கள் மூலம் மாநகராட்சிக்கு வருவாய் பெரும் நோக்கத்துடன் மாத வாடகை நிர்ணயம் செய்யப்படாத கழிப்பிடங்களின் அமைவிடம் மற்றும் கழிப்பிட கட்டிட அமைப்பின் அடிப்படையில் மகளிர் சுய உதவி குழுக்களுக்கு மாத வாடகை நிர்ணயம் செய்ய மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு .

**மாமன்றத்தீர்மானம் எண்.726**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

25) **மநி 1/010056/2010**

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 பிரிவு எண்: 18ன் கீழ் பொது அதிகாரங்கள் பகிர்ந்து அளிக்கும் வகையில், மதுரை மாநகராட்சி ஆணையாளர் அவர்களால் துணை ஆணையாளர் அவர்களுக்கு அதிகாரங்கள் பகிர்ந்தளித்து பிரிவு 18(a)ன்படி மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.727**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**26)ம.வ.3/008599/2014**

மதுரை மாநகராட்சி மண்டலம் எண்: 2, ராஜாஜி சிறுவர் பூங்காவில் சிற்றுண்டி உணவகம் சுமார் 3,000 சதுர அடியில் அமைத்துக் கொள்ள மாமன்ற தீர்மானம் எண் : 691 நாள் : 02.03.1995ன்படி திரு.பி.தேவேந்திர குமார் என்பவருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்நிலையில் உரிமதாரர் தான் நடத்தாமல், மற்றொருவருக்கு உள்வாடகைக்கு விடப்பட்டது நேரடி ஆய்வில் தெரியவந்ததின் அடிப்படையில், நிபந்தனை எண் : 14ன் படி உரிமம் ரத்து செய்யப்பட்டு மாநகராட்சி வசம் கையகப்படுத்தப்பட்டத. தற்பாது மேற்படி உரிமதாரர் கூடுதலாக 870 சதுர அடி உபயோகப்படுத்தி உள்ளார்.

எனவே தற்போது காலியாகவுள்ள 3000+870 சதுர அடி இடத்தினை டெபாசிட் தொகை ரூ.8,00,000/- மற்றும் மாத வாடகை ரூ.25,000/- நிர்ணயம் செய்து மறுஏலம் / டெண்டர் விட்டு அதிக பட்ச ஏலதாரருக்கு ஒதுக்கீடு செய்ய மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.728**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**27)ம.பொ.6/ம.வ.3/006103/2014**

மதுரை மாநகராட்சி மண்டலம் எண் 4 வார்டு எண் – 95 திருப்பரங்குன்றம் வார்டு அலுவலகம் அருகில் கட்டப்பட உள்ள சார்பதிவாளர் அலுவலகம் பின்புறம் 7 கடைகள் Zero Budget அடிப்படையில் கட்டப்பட்டு 24.09.2014ல் பொது ஏலம் நடத்தப்பட்டது. மேற்படி பொது ஏலம் மூலம் உயர்ந்த பட்ச கேள்விதாரர்களுக்கு கடை ஒதுக்கீடு செய்ய மாமன்றத்தின் ஒப்புதலைக்கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.729**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

28) **ம.பொ .4/ 25829 / 14**

மதுரை மாநகராட்சி சுற்றுச்சாலை பகுதியில் உள்ள டோல்கேட் 2ன் அருகில் மாண்புமிகு முதலமைச்சர் வருகையையொட்டி பழுதுநீக்கம் மற்றும் பராமரிப்பு, தற்காலிக கழிப்பறை, குடிநீர்தொட்டி, மருத்துவமுகாமிற்கான சாமியானாபந்தல் அமைத்தல், சாலைஓரம் செம்மண்பரத்துதல், வேகத்தடைகளை அகற்றி பேட்ச் வேலை செய்தல் போன்ற பணிகளுக்கு மாநகராட்சி விதி எண் 15ன்படி பணிகள் செய்து முடிக்கப்பட்டன.

| வ. எண் | வேலை மற்றும் மதிப்பீடு விபரம் | மதிப்பீட்டு தொகை (லட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த விலைவிகிதம் |
|---|---|---|---|---|
| 1 | ம.பொ.4/ 25829 / 14<br>மண்டலம் 2 பழுதுநீக்கம் மற்றும் பராமரிப்பு, தற்காலிக கழிப்பறை, குடிநீர்தொட்டி, மருத்துவ முகாமிற்கான சாமியானா பந்தல் அமைத்தல், சாலைஓரம் செம்மண் பரத்துதல், வேகத்தடைகளை அகற்றி பேட்ச் வேலை செய்தல | 11.27 | C. சிவக்குமார் | மதிப்பீட்டிற்கு சமம் |
| 2 | ம.பொ.4 / Est. 319 / 14-15<br>மண்டலம் 3 தார்பேட்ச் செய்தல், கிராவல் பரத்துதல், பெயிண்டிங் வேலை செய்தல், மற்றும் மணல் மூடைகளை அடுக்கி Sintex tank வைத்து தண்ணீர் சப்ளை செய்தல் | 6.90 | முத்துப்பாண்டி | மதிப்பீட்டிற்கு சமம் |

மேற்கண்ட விபரப்படி பணிகளை மாநகராட்சி விதி எண் 15ன் கீழ் செய்து முடிக்கப்பட்டதை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.730**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**29)<u>ம.பொ.4/Est.2570 /13-14</u>**

மதுரை மாநகராட்சி சக்கிமங்கலம் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் சேகரிக்கும் கிணற்றில் Submersible Sewage Pumpset, Mechanical, Electrical and Instrumentation செய்யும் வேலைக்கு ரூ.99,50,000/-க்கு மதீப்பீடு தயார்செய்யப்பட்டு, ஆணையாளரின் நிர்வாக ஒப்புதல் பெற்றும் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்றும், டெண்டர் வரவழைக்கப்பட்டதில் மின்னனு ஒப்பந்தப்புள்ளி மூலம் (‘E’ Tender) இரண்டு டெண்டர்கள் வரப்பெற்று அதில் M/s Grunfos Pumps India PVT Ltd. சென்னை என்ற ஒப்பந்த நிறுவனம் மதீப்பீட்டு விலைவிதத்தை விட 0.13% கூடுதலாக கொடுத்துள்ளதற்கு அன்னாரிடம் விலைக்குறைப்பு கோரியதில் மதீப்பீட்டு தொகைக்குள் வேலைசெய்துதர சம்மதக்கடிதம் கொடுத்துள்ளதை ஏற்று வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று அன்னாருக்கு வேலை துவங்கும் உத்தரவு வழங்கப்பட்டது.

மேற்கண்ட மதீப்பீட்டிற்கு முன்ஒப்புதல் பெற்று டெண்டர் வரவழைத்ததற்கு நிர்வாக ஒப்புதல் மற்றும் முன் ஒப்புதல் பெற்று வழங்கப்பட்ட வேலை உத்தரவிற்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலைக்கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.731</u>**

**<u>பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.</u>**

**(ஒம்...) வி.வி.ராஜன் செல்லப்பா,**
**மேயர்**
**மதுரை மாநகராட்சி**

**மதுரை**
**நாள்:25.09.2014**

நாள்: 25.09.2014

**<u>தீர்மானம் – 1</u>**

தமிழக மக்களை தன் குடும்பமாகவும், தமிழ்நாட்டை தன் வீடாகவும், மக்களால் நான் மக்களுக்காக நான் என்ற தாரக மந்திரத்தோடு, தமிழக மக்களின் முன்னேற்றத்திற்காக அயராது பாடுபட்டுவரும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், நடந்து முடிந்த உள்ளாட்சித் தேர்தலில் மாபெரும் இமாலய வெற்றியை பெற்று மாபெரும் சரித்திர சாதனையை படைத்து, தமிழக மக்கள் என்றைக்கும் மாண்புமிகு அம்மாவின் பக்கமே என்று நிரூபித்து, தொடர்ந்து மக்கள் பணி ஆற்றிவரும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களை இம்மாமன்றக்கூட்டம் போற்றி வணங்கி, கோடான கோடி நன்றியினை தெரிவித்துக் கொள்கிறது.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.684</u>**

**மேயர்**

## தீர்மானம் – 2

மதுரை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் எண் .2–க்கு (வடக்கு) ரூபாய் 175 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள புதிய அலுவலகத்தை, காணோலி காட்சி மூலம் திறந்துவைத்து, தொடர்ந்து மதுரை மமாநகராட்சிக்கு கியள்ளிக் கொடுத்தால் போதாது என்று, அள்ளி அள்ளி வாரி வழங்கி, வள்ளலுக்கெல்லாம் வள்ளலாக திகழ்ந்துவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு, இம்மாமன்றக்கூட்டம் கோடான கோடி நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறது.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.685</u>**

**மேயர்**

## தீர்மானம் – 3

பட்டப் படிப்புகளில் ஆங்கிலத்துடன்,இந்தி மொழியையும் முதன்முறையாக கற்பிக்க வேண்டும் என்ற சுற்றறிக்கையை , மத்திய அரசு அனுப்பி இருந்ததை, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இந்த இந்தி திணிப்பை கடுமையாக எதிர்த்ததால் ,உடனடியாக மத்திய அரசு பணிந்து, தமிழகத்தில் இந்தி திணிக்கும் முயற்சியை கைவிட்டது . இதன் மூலம் திணிப்பை விரட்டியடித்து, தமிழகத்தை தலைநிமிரச் செய்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு, இம்மாமன்றம் கோடான கோடி நன்றியினைத் தெரிவித்துக்கொள்வதோடு, இந்த இந்தி திணிப்பின் முடிவுகளை அப்போதிருந்த மத்திய அரசு 28.7.11 அன்று எடுத்தபோது, அப்போது ஆட்சியில் பங்குபெற்றிருந்த கருணாநிதி இதை எதிர்காமல், தன் சுயலாபத்திற்காக வாய்மூடி மௌனியாக இருந்து, இதன்மூலம் மத்திய அரசின் இந்தி திணிப்பிற்கு ஆதரவாக செயல்பட்டு, தமிழகத்திற்கு மிகப்பெரிய துரோகத்தை செய்த தமிழினத் துரோகி கருணாநிதியை,இம்மான்றக்கூட்டம் வன்மையாக கண்டிக்கிறது.

<u>மாமன்றத்தீர்மானம் எண்.686</u>

**மேயர்**